398

# ஜகன்மோகினி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS
398
1940

JL
ஜகன்மோகினி.
N42.19.9
183071

...லைஸ்யம் (...டாட்சி)
அ 2 ணா
செப் '42
ஆவணி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

செப்டம்பர் 1942 சித்திரபானு ஆவணி

# விஷய அட்டவணை

மலர் 19. இதழ் 9.


| | | |
|---|---|---|
| 4. சர்வாங்க சுந்தரன் | பி. ஸ்ரீ. | 1 |
| தேசத்தின் நேசப்புதல்வி-மிஸஸ் கஸின்ஸ் அம்மையார் | எஸ். அம்புஜம்மாள் | 5 |
| அகமகிழச்செய்யும் ஆவணி | ''குகப்ரியை'' | 10 |
| சித்திர ரகஸ்ன-(மேல் அட்டை உள்புறம்) | ''கார்த்திகை'' | |
| வாத்ஸல்யம்-59-வது நாவல்-(தொடர்ச்சி) | வை. மு. கோ. | 32-64 |


மேலட்டை படம்: மிஸஸ் கஸின்ஸ் அம்மையார்

## அன்பர்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி

ஆண்டவன் அருளால் வாத்ஸல்யம் ஆரம்ப இதழ் (ஆகஸ்டு) வெளியான நான்கு நாளிலேயே முற்றிலும் செலவாகி இரண்டாம் பதிப்புத் தயார் செய்து மற்றவர்களுக்கு அனுப்பினோம். இவ்வளவு சீக்கிரத்தில் மறு பதிப்பு வரும்படியாக உதவிய ஏஜண்டுகளுக்கும், நேயர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலையும், வந்தனத்தையும் தெரிவித்து மற்ற இதழ்களுக்கும் இப்படியே ஆதரவு காட்டி மோகினியின் அபிவ்ருத்தியில் பங்கெடுத்துக்கொள்ளும்படி பிரத்யேகமாக வேண்டுகிறேன்.

நிற்க, நமது காரியாலயம் தற்சமயம் கிராமத்திலிருப்பது நேயர்கள் அறிந்த விஷயம். கிராமத்திலிருந்து போகும் தபாலும், சஞ்சிகையும் சரி; கிராமத்திற்கு வரும் தபாலும் சரி; ஒருநாள் இரண்டு நாள் தாமதமாகவே கிடைக்கின்றது. ஒவ்வொரு மாதமும் முதல் தேதியே சஞ்சிகை அனுப்பினும், வழியில் ஏற்படும் சிறிது தாமதத்தையும் தாங்காது சிலர் இன்னும் சஞ்சிகை வரவில்லையே என்று 3-ந் தேதியே கடிதம் எழுதுகிறார்கள். நண்பர்கள் பத்து தேதி வரையில் பார்த்துக்கொண்டு எழுதினால் உடனே வேறொன்று அனுப்பப்படும். சிலருக்கு எப்படியோ சஞ்சிகை சேராமல் தவறிவிடுவதாகப் புகார் கிடைக்கிறது. அத்தகைய அன்பர்கள், தயவு செய்து தம் தம் ஊர் போஸ்டாபீஸ்களில் முதலில் கம்ப்ளெய்ன்ட் கொடுத்துப் பிறகு நமக்குத் தெரிவிக்கவும்.

வை. மு. கோ.

4 புதிய சந்தாதாரர்களை 30-9-42க்குள் சேர்த்துக் கொடுப்போருக்கு ஒரு வருஷ சஞ்சிகை அல்லது ரூ 1-8-0 விலையுள்ள மோகினி பிரசுரங்கள் இனாமாக அளிக்கப்படும். ரூ 6 மணியார்டர் மூலமாகவே அனுப்பவும். புதிய நேயருக்கு ஞான தீபம் ஆரம்பம் (ஜனவரி '42) முதல் வேண்டுமா அல்லது வாத்ஸல்யம் ஆரம்பம் (ஆகஸ்டு '42) முதல் வேண்டுமா என்பதைத் தெரிவிக்கவும்.

மானேஜர்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஜயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீ. வீரராகவ் கவி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS

| மலர் 19 | சித்ரபானுஞு ஆவணிமீ செப்டம்பர் 1942 | இதழ் 9 |
| --- | --- | --- |




பி.ஸ்ரீ

## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 4. சர்வாங்க சுந்தரன்

அடிதொடங்கி முடியளவாக அந்தக் குழந்தையின் அழகைத் தாய் பார்த்துப் பார்த்து அனுபவித்துக்கொண்டேயிருக்கிறாள். உண்மையில், அந்த ஆனந்தத்திற்கு அடியுமில்லை; முடியுமில்லை. "இப்படிப்பட்ட ஆனந்தத்தைத் தோழிப் பெண்களோடும் மற்றப் பெண்களோடும் பேசி அனுபவிக்கவேணும்" என்ற ஆசையும் உண்டாகிறது. பங்கிட்டுக்கொண்டால், குறைந்துபோகும் பொருளா அது?

18071

### பாதக் கமலங்கள்

குழந்தை, கைகளால் காலைப் பிடித்து வாய்க்குக் கொண்டுபோய்ச் சுவைத்துப் பார்க்கிறதாம். உடனே யசோதைக்கும் அளவுகோல் தெரியாத மகிழ்ச்சிதான். "என்னடா கிருஷ்ணா! ஒன்றும் தெரியவில்லையே உனக்கு உன் காலில் தேனு சொட்டுகிறது?" என்று சொல்லிக்கொண்டே, "பாருங்கள், ஓடிவந்து பாருங்கள், எங்கள் கிருஷ்ணனுடைய சேஷ்டையை" என்று மற்றப் பெண்களைக் கூவி அழைக்கிறாள்:

'பேதைக் குழவி பிடித்துச் சுவைத்(து) உண்ணும்
பாதக் கமலங்கள்காணீரே; பவளவாயீர்! வந்துகாணீரே!'

[குழவி-குழந்தை. பவளவாயீர்-பவளம்போலச் சிவந்த வாயையுடைய பெண்களே.]

எல்லாக் குழந்தைகளும் செய்கிற செய்கைதான் இந்தக் கிருஷ்ண லீலையும்; எல்லாத் தாய்மாருக்கும் ஏற்படுகிற ஆனந்தம்தான் யசோதைக்கும். ஆனால் இந்த யசோதைதான் யசோதையில்லையே? யசோதை வேஷம் தான்; அந்த வேஷத்திலிருக்கும் பரம பக்தமணியான பெரியாழ்வார்தான்! எனவே, தாயின் ஆனந்தம் பக்தர்களுக்குரிய பரமானந்தமாகிவிடுகிறது.

"அந்தப் 'பேதைக்குழவி' எல்லாம் அறிந்த—எல்லாம்வல்ல—எம் பெருமானுடைய வேஷம், மாயவேஷம்!" என்று எண்ணியதும், குழந்தை 'பிடித்துச் சுவை'க்கும் 'பாத கமலங்கள்,' எந்த அன்புத் தாயாருக்கும் 'தாமரைப் பூவைப்போல் மென்மையானவை' என்று தோன்றக்கூடிய அருமையான சிறிய பாதங்களாக மட்டுமா தோன்றுகின்றன? 'தேனே மலரும் திருப்பாதம்'—உலகத்திற்கு அருளாகிய தேனைச் சொரியும் திருவடித்தாமரை-என்றே காட்சி தருகின்றன! இந்தக் காட்சியின்பத்தைப் பெரியாழ்வாரும் மற்றப் பக்த மணிகளோடு பங்கிட்டுக்கொள்ளவும், பேசியனுபவிக்கவும் விரும்புகிறார், மற்றப் பெண்மணிகளோடு குலாவிய பின்புறம் யசோதைப் பிராட்டிபோலவே.

## கால் விரல்கள்

குழந்தை காலைச் சுவைப்பதைவிட்டு நீட்டி மடக்கிக்கொண்டிருக்கிறது. அந்தக் கால் விரல்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறாள் யசோதை. அந்த விரல்கள் விரல்களாகவா தோன்றுகின்றன அவளுக்கு? ஒரு விரலைப் பார்த்தால், முத்தைப் பதித்து வைத்தாற்போலிருக்கிறதாம். வேறொரு விரல், மாணிக்கத்தைப் பதித்து அந்த முத்தோடு சேர்த்துவைத்தாற்போலிருக்கிறதாம். இன்னொரு விரல், வைரமணிபோல் அமைந்து மற்ற விரல்களோடு இசைந்திருக்கிறதாம். வேறொன்று வேறொரு ரத்தினம்; இன்னும் ஒரு விரல் இன்னொரு ரத்தினம். ஆனால் நவ ரத்தினங்கள்தானே; விரல்கள் பத்தல்லவா? யசோதை ஆச்சரியமாய்க் காட்டுகிறாள் தோழிகளுக்கு அந்தப் பத்து விரல்களையும்:

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல், எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட் டிருந்தவா காணீரே! ஒண்ணுதலீர்! வந்து காணீரே!

[நன்பொன் (நல்பொன்)-நல்ல மாற்று உயர்ந்த பொன். தத்தி-மாறி மாறி. தலைப்பெய்தாற்போல்-சேர்த்தாற்போல். மணிவண்ணன்-நீலரத்தினம் போன்ற வர்ணத்தையுடையவனான கிருஷ்ணன். ஒத்திட்டிருந்தவா-ஒன்றோடொன்று இசைந்து அமைந்திருக்கும் விதத்தை. ஒண்ணுதலீர்-ஒள்நுதலீர்-ஒளிபொருந்திய நெற்றியையுடைய பெண்களே.]

"பெண்மணிகளே! என் மணிவண்ணனுடைய பாதங்களில் பத்து விரல்களும் எப்படிப் பொருந்தி எவ்வளவு லட்சணமாய் அமைந்திருக்கின்றன! பார்த்தீர்களா? நவரத்தினங்களையும் நல்ல மாற்றுயர்ந்த தங்கத்தையும் மாறி மாறி ஒளி விளங்கப் பதித்து வைத்ததுபோல் இருக்கிறதல்லவா, இந்த விரல்களின் அமைப்பும் தோற்றமும்?" என்று பரவசமாகிறாள், அந்த அழகிலும் ஸாமுத்ரிகா லட்சணத்திலும்.

இந்த நாளில் 'மருதாணி'யிடுவதுபோல், அந்த நாளில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் 'செம்பஞ்சு' இடுவதுண்டு. யசோதையோ நவரத்தினம்

போலிருக்கும் ஒன்பது விரல்களுக்கு நவரத்தின வர்ணங்களையும், கடைசி விரலுக்குப் பொன்னிறத்தையும் இட்டு, நகங்களோடு கூடிய அந்த விரல் களைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போய், மற்றவர்களையும் கூப்பிட்டுக் காட்டுகிறாளாம். இப்படியே தண்டையோடுகூடிய கணைக்காலழகு முதலிய வற்றையும் அனுபவிக்கிறாள் யசோதை.

## தவழ்ந்த கிருஷ்ணன்

ஆய்ச்சியல்லவா? தானே பிரயாசப்பட்டுப் பால் கறந்து காய்ச்சித் தோய்த்துக் கடைந்து வெண்ணெயாக்கி உருக்கி மிடாமிடாவாக வைத் திருப்பாள். ஒரு சமயம் அந்தப் புத்துருக்கு நெய்யை ஒவ்வொரு மிடாவாகக் காலி செய்துவிட்டதாம் குழந்தை.

[ஆழ்வார் ஆசாரியர்கள் காலத்தில் 'மிடா'வைத் 'தடா' என்று சாதா ரணமாய்ச் சொல்லுவார்கள்.]

"ஐயோ, இழந்தேனே!" என்று கதறிக்கொண்டு ஓடிவந்தாள். வெண்ணெயை இழந்ததற்கா இவ்வளவு வயிற்றெரிச்சல் இந்த ஆய்ச்சிக்கு? இல்லை; "பிள்ளையை இழந்தேன்!" என்றே எண்ணிவிட்டாளாம். பளிச் சென்று கையைப் பிடித்திழுத்தவந்தாள், 'அடே, அவ்வளவு நெய் செரிக்குமா?" என்று. அதோ தயிர் கடையும் மத்து; அதிலே சுற்றிக் கடைந்து பழகிப்போன கயிறு: அந்தக் கயிற்றைக் கையில் எடுத்துக் கொண்டு ஓங்குகிறாளே! என்ன? பயப்படவேண்டாம்; அடிப்பதாகப் பாவனை: அவ்வளவுதான். கிருஷ்ணனோபயந்து தவழ்ந்து தப்பிப்போகிறான்!

யசோதையோ தோழிகளைக் கூப்பிடுகிறாள்: கூப்பிட்டுத் தன்னுடைய அஜாக்கிரதையைக் குறித்தாவது, கிருஷ்ணனுடைய அஜீர்ணத்தைக் குறித் தாவது பேசுகிறாளா? அதுதான் இல்லை. அந்தத் தவழ்ந்த கிருஷ்ணனை அப் படியே பார்த்துக்கொண்டு நின்றவள், நடந்ததையெல்லாம் மறந்து அந்தத் தவழும் முழங்காலின் அழகிலே ஈடுபட்டு, "நீங்களும் பாருங்கள்" என்று வந்தவர்களுக்கும் காட்டி மகிழ்ந்துபோகிறாளாம்.

அரையிலே அரைநாண்முதலான ஆபரணங்களைப் பூட்டித் தோழிகளை அழைக்கிறாள் யசோதை, "பாருங்கள் இந்தப் புதிய ஆபரணங்களின் அழகை" என்று காட்டுகிறவளைப்போல் காட்டி:

நெருங்கு பவளமும், நேர்நாணும், முத்தும்,
மருங்கும் இருந்தவாகாணீரே! வாணுதலீர்! வந்துகாணீரே!

[நெருங்கு பவளம்-நெருங்கும்படி கோத்த பவளவடம். நேர்நாண்- அழகான அரை நாண். முத்து-(இங்கே) முத்துவடம். மருங்கு-இடை; அரை. இருந்தவா-இருந்தவாறு; இருந்தவிதம். வாணுதலீர் (வாள்நுதலீர்)- ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்களே.]

ஆபரணங்களோடு சேர்ந்த அரையின் அழகை விசேஷமாய்ச் சுட்டிக் காட்டுகிறாள். உண்மையில், ஆபரணங்களா அழகு தருகின்றன? ஆபரணங் களுக்கும் ஆபரணமல்லவா இந்தத் தவழ்ந்த கிருஷ்ணன்!

## கட்டுண்ட கண்ணனின் கண்கொள்ளாக் காட்சி

ஒரு சமயம் கிருஷ்ணனுடைய துஷ்டத்தனத்தைப் பொறுக்கவே முடியவில்லையாம். எத்தனையோ மனைகளில் நெய், வெண்ணெய், தயிர், பால் களவுபோவது சகஜமாகிவிட்டது. தான் தண்டிக்கப்போவ தாய்ப் பயமுறுத்தினால் தப்பிப் போய்விடுகிறான்: எனவே ஆய்ச்சி ஏமாற்றிப் பால் கொடுத்துக்கொண்டே கயிற்றினால் உரலோடு கட்டி வைத்துவிடுகிறாள். கட்டி வைத்து, "அவ்வளவு பாலும் தயிரும்,

வெண்ணெயும் நெய்யும் சாப்பிட்ட வயிறு. பொருமியோ, முட்டியோ, இருக்காதா ?'' என்று பார்க்கிறாளாம். பார்த்ததும், ஆலிலை போன்ற அந்த வயிற்றின் அழகுதான் தெரிகிறது. உடனே 'திருட்டுச் சேஷ்'களையெல்லாம் மறந்து திவ்ய மங்கள சௌந்தரியத்திலே ஈடுபட்டுத் தோழிகளை அழைத்து,

உதரம் இருந்தவா காணீரே !
ஒளிவளையீர் ! வந்து காணீரே !

[உதரம்-வயிறு. வளையீர்-வளைகள் அணிந்தவர்களே.]

என்று காட்டுகிறாளாம்.

கண்ணன் அந்தப் பெரிய உரலை இழுத்துக்கொண்டு அங்கேயிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே போக, அம்மரங்கள் முறிந்து விழுந்த கதை பாகவதப் பிரசித்தமானது. அந்தக் கதையில் சுகப்பிரமம் சொல்லாமல் விட்டதைப் பெரியாழ்வார் பூர்த்தி செய்கிறார்:

பெருமா உரலில் பிணிப்புண் டிருந்(து) அங்(கு)
இருமா மருதம் இறுத்தஇப் பிள்ளை,
குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்(வு) இருந்தவா காணீரே! சேயிழையீர்! வந்துகாணீரே!

[பெருமா உரல். மிகப் பெரிய உரல். பிணிப்புண்டு-கட்டுண்டு. மா-பெரிய. இறுத்த-முறித்த. குருமா-மிகவும் சிறந்த. மணிப்பூண்-இரத்தின ஆபரணம். மார்வு-மார்பு. சேயிழையீர்-செவ்விய ஆபரணங்களை அணிந்த பெண்களே.]

என்று யசோதை மற்றப் பெண்களுக்குக் காட்டுவதாக.

மருத மரங்கள் விழுந்ததும், யசோதை ஓடிப்போய்க் குழந்தையைத் தூக்கியெடுக்கிறாள், "எங்கேயாவது உடம்பிலே காயம் பட்டிருக்கிறதோ?" என்று பார்ப்பதற்காக. பார்த்ததும், அந்தநோக்கத்தை மறந்துபோய், ரத்னாபரணம் குலாவித் திகழும் மார்பின் அழகிலே ஈடுபடுகிறாள். மரங்கள் முறிந்த ஓசைகேட்டு ஓடிவந்த மற்ற ஸ்திரீகளுக்கும், அந்த ரத்நாபரணத்திற்கும் ஒரு திவ்யாபரணம்போலத்திகழும் மார்பைக்காட்டி ஆனந்த பரவசமாகிறாள்.

## தாயன்பும் பேரின்பமும்

ஒரு சமயம், அவள் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யவந்த தோள்களின் சக்தியை அதிசயத்தோடு பார்த்தாள். விரைவிலே அந்த அழகில் மோகித்துச் சக்தி மயமான அந்த அழகைத் தோழிகளுக்கும் காட்டுகிறாள். ஒரு சமயம் அந்தக் கைத்தலங்களின் அழகிலே மோகித்துப் போகிறாள். ஒரு சமயம் கழுத்தின் அழகைக் காட்டுகிறாள்; ஒரு சமயம்,

வாக்கும், நயனமும், வாயும், முறுவலும்,
மூக்கும் இருந்தவா காணீரே ! மொய்குழலீர்! வந்து காணீரே !

[வாக்கு-(இங்கே) மழலைச்சொல். நயனம்-கண்கள். முறுவல்-புன்சிரிப்பு. இருந்தவா-இருந்தபடி. மொய்குழலீர்-நெருங்கிய கூந்தலையுடைய பெண்களே.]

என்றெல்லாம் காட்டிக் காட்டிப் பேரின்பம் அடைகிறாள்.

உண்மையில், இப்பேர்ப்பட்ட தாயன்பின் பேரின்பமெல்லாம், பெரியாழ்வாரின் பக்திப் பேரின்பம்தான். இப்படியெல்லாம் ஸர்வாங்கசுந்தரனை குழந்தைக் கிருஷ்ணனுடைய சக்தி மயமான ரூபசௌந்தரியத்தை அனுபவிக்கும் யசோதையின் கண், பெரியாழ்வாரின் பக்தி மயமான அகக் கண்தான். ஸ்ரீ கிருஷ்ணானுபவத்தில் ஈடுபடும் நமது தமிழ்நாட்டின் பக்த மணி, அந்த மேனியழகைப் பாதாதி கேசாந்தமாய் அனுபவிக்கிறார்

யசோதைப் பிராட்டியின் கண்களாலேயே. தன்னோடு தோழமை பூண்ட மற்றப் பெண்களுக்கும் அந்தத் தாய் காட்டியதுபோல், இப் பெரியாரின் தாயுள்ளமும், தாம் கண்ட 'அழியா அழகு' என்ற அந்த மேனியை—அந்த லீலா விசேஷத்தை—த்தம்மோடு ஒத்த உணர்ச்சியுள்ள கிருஷ்ண பக்தர்களுக்கும் 'காணீர்! காணீர்!' என்று காட்டுகிறது. கண்ணுள்ளவர்கள் இன்றும் கண்ணனைப் பார்த்துக்கொள்ளலாம்; யசோதைபோலவும் பெரியாழ்வார்போலவும் பார்த்துப் பார்த்துப் பேரின்பம் பெறலாம்.

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

# தேசத்தின் நேசப் புதல்வி

## மிஸஸ் கஸின்ஸ் அம்மையார்

தற்கால இந்தியாவில் அறிவுப் பயிற்சியிலே ஆண்களுக்குக் கொஞ்சமும் குறைவில்லாத பெண்களைச் சந்திப்பது அசாதாரணமல்ல. இவர்களில் சிலர் தேச சேவையில் ஈடுபட்டுப் பல துறையிலும் பிரசித்தி பெற்றிருக்கிறார்கள். தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தேசப் பணிக்கென்றே அர்ப்பணஞ் செய்திருப்பவர்களும் உண்டு. இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த செல்விகள் இவ்விதம் தம் தாய்நாட்டுக்காக உழைக்க முன்வந்திருப்பது சகஜமே.

### வழி காட்டியவர்கள்

ஆனால், பல ஆயிரமைலுக்கப்பால் உள்ள அன்னிய தேசத்துப்பெண்கள் நமது நாட்டுக்கு வந்து இந்தியத் தாயைத் தம் தாயென ஸ்வீகரித்து நேசித்து, அவளுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது என்பதுதான் நாம் ஆச்சரியப்படக்கூடிய விஷயம். அத்தகைய அரும்பணி செய்தவருள் இருவரை நம் தேசம் ஏற்கெனவே நன்கு அறிந்திருக்கிறது.

அனிபெஸண்ட் அம்மையாரின் அரும்பணிகள் உலகம் அறிந்த விஷயம். இந்தியப் பெண்களின் விழிப்பிற்காக அவர் செய்துள்ள காரியங்களின் பயனை இன்று நாம் விசேஷமாய் அனுபவித்துக்கொண்டிருக்கிறோமென்று சொல்லலாம்.

மற்றவர் சுவாமி விவேகானந்தரின் தர்ம புத்திரியான சகோதரி நிவேதிதை அம்மையார். ஆதியில் நம் தேசத்தின் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதற்கென்று முன்வந்த சகோதரியைக் கேட்டறியாதவரும் உண்டோ? நமது புதுமைக் கவிஞர் பாரதியார் "என் அன்னை நிவேதிதா தேவி: என் ஞான குருவும் அவரே. அவரிடமிருந்தே நான் தேசபக்தி-உபதேசம் பெற்றேன்" என்று அடிக்கடி சொல்லுவாராம். பாரதியார் அந்த அம்மையாரின் நினைவைத் தமது அருமையான பாடல் ஒன்றில் நிலை பெறச் செய்திருக்கிறார். அவர் நமது நாட்டை எவ்வளவு தூரம் தம தாக்கிக்கொண்டு தொண்டாற்றினார் என்பதற்கு அவரது இந்தியப் பெயரே தக்க சான்றல்லவா?

அவர்களது பூத உடல் இப்பொழுது நம் மத்தியில் இல்லை. அவர்களுடைய புகழுடலையே நம்மால் இன்று காணமுடிகிறது. ஆயினும் இந்நாளில் மிஸஸ் கஸின்ஸ் அம்மையார் நமக்கு அவர்களுடைய ஸ்தானத்தில் இருக்கிறார் என்பது சற்று ஆறுதலை அளிக்கவே செய்கிறது.

## குணாதிசயமும் சமூக சேவையும்

ஸ்ரீமதி கஸின்ஸ் அவர்களை ஒரு முறை சந்தித்தவர் என்றும் மறக்கமுடியாது. தம் மனோநிலையை விளக்கும் இவரது சம்பாஷணைத் திறம், பிறருக்குச் சேவை செய்வதில் இவருக்குள்ள உத்ஸாகம், இவர் தம் கலைஞானம், இவருக்கு இந்திய மக்களிடத்திலும் இந்தியாவின் பழமையான மனப் பண்பிலும் (Culture) இருக்கும் ஆர்வம், இவை யாவும் கண்டவர் மனத்தை அப்படியே கவர்ந்துவிடுகின்றன; இவரிடத்திலே ஊன்றிய நம்பிக்கையையும் நேசத்தையும் தூண்டிவிடுகின்றன.

மிஸஸ் மார்கெரெட்டு கஸின்ஸின் சொந்த நாடு அயர்லாந்து தேசம். இவர் அந்த நாட்டு (அப்போதிருந்த) ராஜீய கலாசாலையில் பீ. ஏ. வரை படித்து, சங்கீதத்தில் முதன்மையாகத் தேறினார். சங்கீத சாஸ்திரத்தில் நிபுணர் என்பதற்கு அத்தாட்சியாக ஒரு தங்கப் பதக்கத்தையும் பரிசாகப் பெற்றார். இவர் தமது 25வயதில் டாக்டர் ஜேம்ஸ் கஸின்ஸ் என்பவரை மணந்தார். மேனாடுகளில் காதல் மணம் சகஜமேயானாலும், மனமொத்த காதல் என்பதெல்லாம் மணச்சடங்குக்கு முன்புதான்: விவாகத்திற்குப்பின் பெரும்பாலும் பரஸ்பர மனக்கசப்பாகவே முடிகிறது. அதுபோலன்றி கஸின்ஸ்-தம்பதிகளின் மணவாழ்க்கை இன்றுவரை நிலை பெற்ற குன்றாத காதலை உடையதாக இருப்பதினால், ஆங்கிலத்தில் கூறுவதுபோல அவர்களை another Derdy & Joan என்று அதாவது 'மனமொத்த தம்பதிகள்' என்று சுட்டிக்காட்ட இயலும்.

மிஸஸ் கஸின்ஸுக்கு அப்போதே சுதந்திரப்பற்று அசாத்தியமாக இருந்திருக்கவேண்டும். (Irish Home-rule movement) அயர்லாந்து சுய ஆட்சி இயக்கத்தில் இவர் தீவிரமாகக் கலந்துகொண்டதே இதற்கு அத்தாட்சி. 1906-ம் வருஷத்திலிருந்து 1914-ம்வருஷம்வரை இவருடையவாழ் நாள்கள் ஒரு நிரந்தரமான சுதந்திரப் போராட்டமாகவேயிருந்திருக்கிறது.

இங்கிலாந்திலே நடந்த ஸ்திரீ சுதந்திர இயக்கத்திலே இவர் தீவிரமாய்க் கலந்துகொள்ளவே, அதற்காக 1910-வருஷம் இங்கிலாந்திலும் 1913-ம் வருஷம் அயர்லாந்திலும் சிறைவாசம் செய்ய நேர்ந்தது.

நம் தேசத்தின் அதிர்ஷ்டவசத்தால் 1915-ம் வருஷம் இவர் அனிபெஸண்ட்டு அம்மையுடன்கூட வேலை செய்ய இந்தியா வந்து சேர்ந்தார். அப்போது வயது சுமார் நாற்பது. இவர் பூனாவில் உள்ள ஆசிரியர் கர்வே பெண் கலாசாலையின் செனெட் மெம்பராக இருந்து வேலை பார்த்தார். அதன்பின் மதனபள்ளி 'தியாஸபிகல்' கலாசாலையில் ஆசிரியராக இருந்து 1921 வரை வேலை பார்த்தார்.

## விசேஷப் பணி

மிஸஸ் கஸின்ஸ் தம் நாட்டிலேயே பெண்களின் உரிமைக்காகத் தீவிரமாய்ப் போராடியவராகையால், யாதொரு சொத்துச் சுதந்திரமுமற்று வாழும் இந்தியப் பெண்களின் பரிதாப நிலைமையை எப்படிச் சும்மா பார்த்துக்கொண்டிருக்கமுடியும் இவரால்? ஆகவே அதற்காக வேலை செய்வதற்கென்று ஒரு ஸ்தாபனத்தை அனிபெஸண்டு அம்மையின் உதவியால் ஏற்படுத்தினார். அதுவே இப்பொழுது இருக்கும் இந்திய மாதர் சங்கம்.

இச் சங்கத்தின் காரியதரிசியாகவும், இச்சங்கத்தின் மாதப்பத்திரிகையாகிய 'ஸ்திரீ தர்மா'வின் ஆசிரியையாகவும் இருந்து பல வருஷம் சிறப்பாக உழைத்திருக்கிறார்.

1917-ம் வருஷம் இவரால் தயார் செய்யபட்ட பெண்கள்-தூது கோஷ்டி ஒன்று ஆனரபில் மாண்டேகு துரையைப் பேட்டி கண்டு, பெண்களுக்கும் ஓட்டுரிமை வேணுமென்று விண்ணப்பித்துக்கொண்டது.

(All India Women's Conference) 'அகில இந்திய மாதர் மகாநாடு' என்ற கூட்டத்தை முதல் முதல் கூட்டி வைத்தவரும் இவரே. 1927-ம் வருஷம் பூனாவில் நடந்த கூட்டத்திற்குக் காரியதரிசியாகவும், 1936-ம் வருஷம் நடந்த கூட்டத்தின் தலைவியாகவும் இருந்திருக்கிறார்.

டெல்லியில் சில வருஷங்களுக்குமுன் நிறுவப்பட்ட 'லேடி இர்வின் கலாசாலை' என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தின அங்கத்தினருள் இவரும் முக்கியமானவர்.

ஸ்திரீகளில் கௌரவ மாஜிஸ்திரேட்டாக இவரைத்தான் சென்னை சர்க்கார் முதல் முதல் நியமித்தார்கள். அந்தப் பதவியை ஐந்து வருஷம் வெகு செம்மையாக வகித்துவந்தார்.

இவர் தம் கணவருடன் அமெரிக்கா முதலிய நாடுகளில் பிரயாணம் செய்து, அங்குள்ள ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றிய விவரமெல்லாம் தெரிந்துகொண்டுவந்தார்.

## தேசியப் பணி

இவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்தபோது சத்பாக்கிரக இயக்கம் நாடெங்கும் நடந்துகொண்டிருந்தது. இவர் 'சுதந்திரம்' என்ற சொல்லையே வேதவாக்காகக் கருதும் இயல்புடையவராதலின், இவரால் இந்தியரின் தேசிய இயக்கத்தில் கலந்துகொள்ளாமல் இருக்கமுடியவில்லை.

இவருடன் நான் நெருங்கிப் பழகியது அக் காலங்களிலேதான். அடிக்கடி எங்கள் சுதேசிய ஊர்வலங்களில் வந்து கலந்துகொள்வார். அப்போதெல்லாம் எங்களுக்கு அப்பணியில் மட்டில்லாத உத்ஸாகம் உண்டாகிவிடும். மழை வெய்யில் என்று பாராமல் எங்களுடன் பிரபாத் பேரி நடத்துவார். நாங்கள் தேசிய கானம் பாட, இவர் கைகொட்டித் தாளம் போடுவார். 'சுதேசி' பிரசாரத்திற்காக முதுகில் விளம்பர அட்டையைச் சுமந்து எங்களுடன் கடற்கரையில் நடந்து செல்வார். கதர்ப்புடவையைக் கட்டிக்கொண்டு எங்களைப்போலத் தரையில் உட்கார்ந்து வாழை இலையில் போஜனம் செய்யும்போது இவரை எம்முடன் பிறந்த எங்கள் நாட்டுச் சகோதரி ஒருவரென்றே கருதினோம்.

இவருக்கு ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமான மனப்பான்மையே கிடையாது. எல்லோருடனும் சகஜமாய்ப் பழகுவார். எங்களுடன் கிராமப் பிரசாரங்களுக்கு வந்தபோது, கிராமத்துப்பெண்கள் இவரைக் கண்டு அப்படியே பிரமித்துப்போவார்கள். இவருடைய புன்னகையும் எளிய சுபாவமும், அவர்களை எளிதில் வசீகரித்துவிடும்.

1932-ம் வருஷம் நடந்த தேசிய இயக்கத்தில் (Security Prisoner) ஆக ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை பெற்று வேலூர்ச் சிறையில் வைக்கப்பட்டார். அச் சிறையிலிருந்த சகோதரிகள் அனைவருக்கும் இவரிடம் ஆழ்ந்த நட்பு உண்டாகிவிட்டது.

## ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்



### ஒரு நேசப் பாலம்

இவர் நம் நாட்டிற்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் செய்த பணிகள் பல. அத்தனையும் இங்கே சொல்வதற்கில்லை. சென்னைச் சேவாசதனத்தை முதலில் உருவாக்கியவரும் இவரே. 'ஆடம்பரமற்று மௌனமாக வேலை செய்யும் இந்தியாவின் உண்மை-நண்பர் இவர். இவர் போன்றவர்களே கிழக்கும் மேற்கும் சந்திப்பதற்கான ஒரு நேசப்பாலத்தை அமைக்கக்கூடியவர்கள்—என்று பலுச்சிஸ்தான் பத்திரிகை கூறுவது எவ்வளவு உண்மையானது!

இவர் செய்த ஒரு பெரிய வேலை, 'அகில ஆசியாக் கண்டத்துப் பெண்கள்மகாநாடு' என்ற ஒரு கூட்டத்தைக் கூட்டிவைத்து ஆசியாக் கண்டத்துப் பெண்களிடையே பரஸ்பர சிநேகபாவத்தை உண்டாக்கியதாகும்.

இவருக்கு இப்பொழுது வயது 61 ஆகிவிட்டது. இவர் தம் கணவருடன் நீலகிரிமலையிலுள்ள 'கோத்தகிரி' என்ற இடத்தில் தற்சமயம் வாசம் செய்கிறார். இவர் கணவருடைய 70-ம் வயதுக்கொண்டாட்டம் மதனபள்ளியில் சமீபகாலத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மிஸஸ் கஸின்ஸுக்கு மகாத்மாவிடம் ஆழ்ந்த பக்தியுண்டு. அவருடைய அஹிம்ஸா தர்மக் கொள்கையைப் பெரிதும் ஆதரிப்பார். சுமார் நாற்பது வருஷகாலமாகச் சைவ ஆகார நியமத்தையே அனுஷ்டித்து வருகிறார். இவர் சித்திரம் முதலிய கலைகளில் பெரிய மேதாவி. ஆகையால், வெறும் மோட்டாக் கதர்த்துணியைக்கூட வெகு அழகாக உடுத்திக் கொள்ளுவார். இரண்டு மோட்டாக் கதரில் பூப்போட்ட சால்வைகளை வைத்துக்கொண்டு விசித்திர விசித்திரமான உடுப்புகளைத் தயார் செய்து விடுவார். எங்களுக்கெல்லாம் இவர் கதர் உடையைப் பார்க்கும்போது பொறாமை பிடுங்கித் தின்னும்.

இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார். 'இந்தியப் பெண்களின் தற்கால நிலைமை (Indian Womenhood today), 'கிழக்கு-மேற்கு நாடுகளின் சங்கீதம்' (music of the Orient & Occident) என்பன குறிப்பிடத்தக்கவை.

இவருடைய பணிகளையெல்லாம் பார்க்கும்போதும், பொதுவாக ஆசியாக் கண்டத்தின்மீதும், சிறப்பாக இந்தியா தேசத்தின்மீதும் இவருக்குள்ள பாசத்தை நோக்கும்போதும், 'நமது நாட்டிலேயே பிறக்கவேண்டியவர் மேல்நாட்டிலே தப்பிப் பிறந்துவிட்டாரோ?' என்றுகூட ஐயம் கொள்ளும்படி இருக்கிறது.

---

குறிப்பு:—ஸ்ரீமதி கஸின்ஸ் அவர்களைப்பற்றி நமது சகோதரியார் வெகு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். அவருடன் நான் பழகி அறிந்த இரண்டொரு குறிப்புக்களை இங்குக் கூற விரும்புகிறேன். எங்கள் சுதேசி லீகில்தான் நான் மிஸஸ் கஸின்ஸை அடிக்கடி சந்தித்ததுண்டு. சின்ன வார்த்தைகளாக சில வார்த்தைகள் தமிழில் அவர் பேசும்போது குழந்தைகளின் மழலைச்சொல்லமுதத்திலுள்ள சுவையும் தேசபக்தியின் ஆழமான அன்பும் ஜ்வலிக்கும். தமிழில் பேசினால் அவருக்குச் சில வார்த்தைகள் புரியும். ஒரு சமயம் எங்கள் ச்வதேசி லீகில் ஒரு முக்யமான தினத்தன்று (மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தினமென்று நினைவு) நாங்கள் ஊர்வலம் நடத்தியபோது அவர் வீரப் பெண்மணியாய் தேசீயக்கொடி தாங்கி முதன் முதல் வீதியில் நின்றதோடு, நமது கவியரசர் பாரதியாரின் கீதமாகிய, "ஜெய ஜெய பாரத" என்ற பாட்டின் முதலடியை தமது மெல்லிய குரலால் கம்பீரமாக எடுத்துப் பின் "கோர் ஆன் கோதைநாயகி! நீங்கள்

பாடுங்கள்'' என்றார். சபையிலிருந்தவர்களுக்கு வியப்பால் உடல் பூரித்தது. சில பெண்களுக்கு வெட்கத்தால் முகம் கவிழ்ந்தது. அந்த பாட்டை நான் பாடும்போது மிஸஸ் கஸின்ஸ் ஆனந்தமாகக் கேட்டதோடு, ''இந்த ராகம் பிலகரியல்லவா?''...என்று என்னைக் கேட்டார். எனக்குண்டாகிய வியப்பிற்கு எல்லையே இல்லை. கர்னாடக சங்கீதத்தில்அவருக்குள்ள ஆர்வத்தையும் அனுபவத்தையும் கண்டு யார்தான் வியக்கமுடியாது?

மோகனராகத்தில் நான் ஒரு பாட்டுபாடியபோது அவரும் கூடவே ராகத்தை இழுத்தார். ''ஸரிகபதஸா...ஸதபகரிஸா...இதுதானே இந்த ராகத்தின் ஆரோகணம், அவரோகணம்?'' என்றார். நமது நாட்டிலேயே பிறந்து நமது நாட்டு சங்கீதத்தை இரவு பகலாகக் கேட்டும் ராகம் இன்னதென்று தெரியாதிருப்பவர்கள் நமது அம்மையாரின் கர்னாடக சங்கீதத்தைக் கேட்டு வியக்காமலிருக்க முடியுமா?

நான் ஒரு சமயம் ஸ்வாமி தரிசனத்திற்காக திருவனந்தபுரம் சென்றிருந்தேன். அங்கு சங்கீத மகாநாடு நடப்பதாயும், அதற்கு ஸ்ரீமதிஅம்மையார் தலைமை வகிப்பதாயும், என் வரவை அறிந்து அவர் என்னை அழைப்பதாயும் ஒருவர் வந்து கூப்பிட்டார். நானும், எனது சிநேகிதையான சேலம் ஸ்ரீ காமாக்ஷியம்மாளும் சென்றோம். ஸ்ரீமதி கஸின்ஸ் என்னை அன்போடு வரவேற்று. ''நம்முடைய நேசம் எப்படி ஒருவரை யொருவர் அறியாமலேயே சேர்த்துவிட்டது பார்த்தாயா! தயவுசெய்து அந்த மோகன ராகப் பாட்டும், காம்போதி ராகத்தில் ''எத்தனை ஜென்மம்'' என்கிற பாட்டும் பாடி, 10 நிமிஷம் சங்கீதத்தைப்பற்றிப் பேசவேண்டும்'' என்று உத்திரவிட்டார். அவர் விருப்பப்படியே பாடி, பேசினேன். அவர் தலைமைப் பிரசங்கத்தில் சங்கீதத்தின் பெருமையைப்பற்றிப் பேசியபோது ஒரு சங்கீத வித்வான்தான் பேசுகிறார் என்று பிரமிக்கத்தக்கவிதமாக இருந்தது.

நான் சிறைச்சாலையிலிருந்து விடுதலையான மறுதினம் அவரைச் சந்தித்தேன். அவர் முதல்முதல் சொன்னதாவது: ''உன்னைப்பார்த்தால் எனக்குப் பொறாமையாயிருக்கிறது. நானும் இம்மாதிரி ஒருநாள் வந்தால்தான் மனம் சாந்தியடையும்'' என்றார். தேசபக்தியின் ஆர்வம் எவ்வளவு பொங்குகிறது. இத்தகைய பக்தியுடன் நம் நாட்டுப் பெண்மணிகள் முன்வரவில்லையே என்று குறைபடாமலிருக்கமுடியுமா! அந்தம்மாள் ஒரு ஊர்வலத்தில் எங்களோடு வரும்போது, சில பாமரப் பெண்கள், வெள்ளைக்காரச்சிகூட போறாளே! வெள்ளக்காரச்சி பாருடீ!' என்று வியப்புடன் உரக்கக் கூறியதை கூரிய மதியுடைய அம்மையார் கவனித்துவிட்டார். தன்னைக் காட்டிச் சொல்லிய வார்த்தைகளை அறிய விரும்பினார். மிஸஸ் லக்ஷ்மீபதி மொழிபெயர்த்தார்.. அம்மையார் கலகலவென்று சிரித்துவிட்டு ''உங்களோடு நான் உங்கள் பாஷையில் பேசமுடியாததற்கு வருந்துகிறேன். இந்த உலகத்தை ஒரே ஆண்டவன்தான் படைத்தான். இந்த உலகத்திலுள்ள மக்கள் தம் தம் கடமையைச்செய்து தாம் தாம் உள்ள நாடுகளின் சுதந்திர தேவியை தரிசிக்க ஆர்வத்துடன் முன்வரவேண்டும். எங்கள் மேல்நாடுகளைப்போல் இந்த பாரதநாடும் சுதந்திரம் பெறுவதற்காக நாம் உழைக்கத் தயாராக முன்வரவேண்டும். எனக்கு இந்தியாவும் சொந்தந்தான். யூரோப்பும் சொந்தந்தான். நீங்களும் வந்து கூடச் சேர்ந்து ஊர்வலத்தை நடத்துங்கள்'' என்ற ஒரு குட்டி லெக்சர் செய்ததை ஒரு சகோதரி மொழி பெயர்த்துக்கூறினார். அந்த பலன், சில பாட்டிமார்களையும் சில பெண்மணிகளையும் அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளச்செய்தது. வை. மு. கோ.

குகப்ரியை

# அகமகிழச்செய்யும் ஆவணி

பன்னிரெண்டு மாதங்களுக்குள் சில மாதங்கள் மட்டும் குழந்தைகள் முதல் கிழங்கள்வரையில் அளப்பரிய ஆனந்தத்தைக் கொடுத்து புதிய சக்தியையும் உத்ஸாகத்தையும் அளிப்பதால் அம்மாதம் பிறப்பதற்குமுன்பே "என்று பிறக்கும், என்று பிறக்கும்?" என்று மனது அதிக தாகத்துடன் எதிர்நோக்கி நிற்கின்றது?

"புயலுக்குப் பின் அமைதி" என்பார்களே அந்த ஆனந்தத்தை ஆவணி பிறந்ததும் அனுபவிக்கிறோம். ஆவணியிலேதான் எத்தனை விழாக்கள்! ஒன்றன் பின் ஒன்றாய்ப் பல பண்டிகைகள், உத்ஸவங்கள், திருமகளை முன்னிட்டு எம்பெருமானை அடைக்கலம் புகவேண்டும் என்று பெரியோர் சொல்லுவார்கள். அதுபோல திருமகளை முன்னிட்டே பண்டிகைகள் தொடங்கும்.

"இதென்ன இது? கனவா? நனவா? நான் எண்ணியதுதான் தாமதம். அந்த எண்ணங்களின் தொகுதியிலிருந்தே எழுந்ததுபோல் தோன்றிவிட்டாளே! என் தாய் என்ன அழகு! என்ன அழகு! அந்த மலர் முகத்துக்கு எதைத்தான் உவமை சொல்லமுடியும்? நீண்டு செவ்வரி படர்ந்தஅந்த கருணைநிரம்பியகண்களுக்குத்தான் உவமை சொல்லமுடியுமா?

செந்தாமரைத் தடங்கண் செங்கனி வாய் செங்கமலம்
செந்தாமரை அடிகள்
முடிச் சோதியாய் உன்றன் முகச் சோதி மலர்ந்ததுவோ?
அடிச் சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?

என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ளுகிறாள் சாருமதி என்னும் அரசிளங் குமரி. கேட்ட வரங்களையெல்லாம் வழங்கும் வரலக்ஷ்மியை பூசிக்க விரும்பிய அவள்முன்னே கதிரொளிபோல் தோன்றி விடுகிறாள் ஸ்ரீ தேவி. தேவியின் பேரழகிலே மயங்கிய அவள், "இந்த சௌந்தர்யத்தோடு நம் வீட்டிலே தங்கினால் "கண்ணேறு பட்டுவிடும்" என்று நினைத்துவிட்டாள் அன்பின் மிகுதியினால்.

பொற்குடத்திலே நல்முத்தை அளந்து நிரப்பி "தாயே! இந்த உருவோடு தோன்றுவது சரியல்ல. இந்தக் குடத்துள் மறைமுகமாக இருந்து அருள் செய்யவேண்டும்"என்று வேண்டுகிறாள். சாருமதியின் விருப்பத்திற்கிணங்கி அந்தக் குடத்திலே மறைந்துவிட்டாள் மகாலக்ஷ்மி. இந்தப் புனிதமான நன்னாளைத்தான் சிராவண பௌர்ணமிக்கு முன் வெள்ளியன்று கொண்டாடிப் பூமகளை வழிபடுகிறோம். வரலக்ஷ்மி நோன்பு தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மக்களால் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ தேவியின் அருளை வேண்டாதவர் யார்?

வீட்டுக் கூடங்களிலே அழகிய பூம் பந்தல்கள். வீடு முழுவதும் இழைக்கோலம், பெண்களும் குழந்தைகளும் கோடி உடுத்து, தங்களை அலங்கரித்துக்கொண்டு தேவியை வரவேற்கச் சித்தமாவார்கள். தெருவை அடுத்த நடையிலே கிழக்கு முகமாக ஒரு தாம்பாளத்திலே, தேவியின் திருவுருவை வைத்து இருபுறமும் குத்து விளக்குகளை ஏற்றி வைத்துப் பூசிப்பார். பிறகு பலரையும் அழைத்து "எங்கள் வீட்டிற்கு வந்து அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிப் பாடல்கள் பாடி, உள்ளே அழைத்துச் சென்று பூம்பந்தரின் கீழே வைத்துப் பூசை தொடங்கும்.

மஞ்சள் நிறமுள்ள 'சரடு'களில் வாசனையுள்ள மலர்களைத்தொடுத்து தேவியின் திருவடியில் வைத்திருப்பார்கள். அந்தச் சரட்டை பூஜை முடிந்தபிறகு வலது கையிலே கங்கணம்போல் கட்டிக்கொள்வார்கள். "சாருமதி என்ற அந்தப் பெண்ணரசி எதன் பொருட்டுக்கங்கணம் கட்டிக் கொண்டிருப்பாள்?" என்பதைப்பற்றி பெரியோர்கள் ஒன்றும் சொல்ல வில்லை. அவர்கள் சொல்வது வழக்கம்; அவ்வளவுதான். ஆனால் நமக்கு என்ன தோன்றுகிறது. சாருமதியைப் போன்ற சிறந்த அறிவும் பக்தியு முள்ள பெண்கள் வெறும் நோன்பிற்கு அறிகுறி என்பதற்காக இதை அணிந்திருக்கமாட்டார்கள். ஸ்ரீதேவியின் அருளினால் என் போன்ற சகோதரிகளிடமிருந்து, அறியாமை அசுத்தம், எழ்மை, பொறாமை, என் கின்ற பேய்களைத் துரத்திவிடுகிறேனென்று கங்கணம் கட்டிக்கொண் டிருக்கலாமல்லவா?

அடுத்தது ஆவணி அவிட்டம். இதை ஒருமதச் சடங்காகக் கொண்டாடு கிறோம். ஆழ்ந்து பார்க்கும்பொழுது கிறிஸ்தவர்களின் பாவ சங்கீர்த்தனத் தைப்போலவேதான் இதவும் தொனிக்கிறது. உபநயனம் செய்யப்படு கின்ற ஒவ்வொரு மதத்தினரும், இதை மிக மிகப் புனிதமான ஒரு சடங் காகத்தான் கொண்டாடுகிறார்கள். பழைய பூணூல்களைக் களைந்து புதிய வைகளை அணிகிறோம். காயத்ரிதேவியை உபாஸிக்கிறோம் மறுநாள் காலை. இவைகள் இன்றியமையாதவைதான். ஆனால் இதில் சொல்லப்படுகின்ற பாப சங்கீர்த்தனத்தைக் கேட்கும்பொழுது, வருஷந்தோறும், செய்யாத பாபங்களுக்குப் புரியாத பாஷையிலே மன்னிப்பு எதற்கு? பக்தி உணர்ச்சி யும் மத பக்தியும் வளர்ந்தோங்கும் நம் நாட்டில், இந்த வீண் புரளிகள் எதற்கு? இந்த விஷயத்தில் என்மேல் பலருக்குக் கோபம் வரலாம். உண் மையிலே மனங்கசித்து பச்சாதாபப்படுகின்றவனைக் கடவுள் மன்னிக்கிறார். பாபி என்று வெறுப்பதில்லை. இது அறிந்தோ அறியாமலோ செய்யும் குற் றங்களுக்கு. ஆனால் செய்யாத குற்றத்திற்கும் பிராயச்சித்தம் வேண்டுமா?

'ஓணம்' என்பது கேரள நாட்டில் மிகப் பிரசித்தமான ஒரு பண் டிகை. ஆவணியிலே உத்திரம் தொடங்கித் திருவோணம் வரையில் இந்த விழா 11 நாள் வீடுகள்தோறும் விமரிசையாய் நடைபெறும். மகாபலி யின் நினைவின் பொருட்டே இந்த விழா. இந்த நாட்களில் பரம ஏழையா யிருந்தாலும் பிறர் வீட்டில் சாப்பிடமாட்டார்கள். "காணி கோடுத் தேனும் ஓணம் உண்ணணும்" என்பது பழமொழி. ஏற்பது இகழ்ச்சி என் பதை இந்த விழா வருஷந்தோறும் நினைவு மூட்டும். இந்த விழாவை ஒட்டிப் பல பழமொழிகள் உண்டு. "உத்திரம் கறுத்தால் ஓணம் வெளுக் கும்; ஓணம் கறுத்தால் உத்திரம் வெளுக்கும்" என்பதுவும் ஒன்று. அதா வது ஒன்றில் மழையுண்டானால் மற்றொன்றில் மழையில்லை என்பது பொருள். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இந்த விழா பதினைந்து நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும்.

இதயத்தில் சொல்லொணா ஆனந்த ஊற்று சுரக்கிறது. கண்ணில் ஆனந்தபாஷ்பம் உதிருகிறது. கண்ணன் பிறந்தான் மணிவண்ணன் பிறந் தான். ஆயர்குலத்து அழியாச்சுடர் ஜோதி பிறந்தான் என்று ஆயர்பாடியில் கோபாலர்களும் கோபியர்களும் கூறி ஆரவாரித்த வைபவத்தை நினைக்கும் போது தேகம் பரவசமாகி மயிர் சிலிர்த்து கரங்கள் தாமாகக் குவிகின்றன.

சென்ற இதழிலே, பெரியாழ்வார் கண்ட ஸ்ரீ ஜயந்தியைக் கண்டோர்கள். இன்று ஆயர்பாடியலே விளையாடிய அந்த ஜகன்மோகன வேணுகோபாலன்,

களது தாழ்வாரங்களிலே தனது சிற்றடிகளைப் பதியவைத்தும் பையப் பைய நடந்து வந்து நாம் இட்டிருக்கும் அந்த இழைக் கோலத்தின் நடுவே உட்கார்ந்து விடுகிறான் நாம் வைத்திருக்கும், வெண்ணெய்க்கும், நாவற் பழத்துக்கும், புளியம் பிஞ்சிற்கும் ஆசைப்பட்டு. நாம் என்ன செய்கிறோம்?"அன்றொரு பாரதம் ஆக்கவந்தோனே! ஆரியர் வாழ்வினை ஆதரிப்போனே! இன்று என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்கிறோம். அதோ அவன் உதடுகள் அசைகின்றன? என்னசொல்லுகிறான்? அறம்வெல்லும் மறம்மடியும்.

இனி எப்பொழுதும் முன்னவனாய் வந்து நிற்கும் ஐங்கரன் இப்பொழுது கடைசியில் நின்று வேடிக்கை பார்த்த வண்ணம் வருகின்றான். விநாயக சதுர்த்தி கொண்டாடப்படாத வீடு கிடையாது. வீடுகளில் பூஜை, நிவேதனங்கள் வெகு விமரிசையாக நடைபெறும். சின்னஞ்சிறு குழந்தைகள் சப்பரங்கள் செய்து, "தொந்திக் கணபதி அண்ணா ஜய ஜய, வேலுமயிலும், ஹராஹரா முருகா" என்றெல்லாம் பாடிக்கொண்டு வீதி வலம் வரும் காட்சி அற்புதம். ஒருவன் ஓலைச் சுருளிலே நாயனம் வாசிப்பான். இன்னொருவன் ஓட்டைத் தகரத்திலே தவில் மிருதங்கம் கஞ்சிரா இவைகளெல்லாம் வெட்கும்படி தனக்குத் தெரிந்த ஜதிகளை யெல்லாம் வெளுத்து வாங்குவான். இன்னும் சில குழந்தைகள் இவர்களுக்குப் பின்னணியாக இன்னது சொல்வது என்று விளங்காமல், "இட்லீ இட்லீ கோவிந்தா! ஈசாமி கோவிந்தா" என்று பரமபக்தியோடு நாமாவளிகளைப் பாடி பஜனை செய்வார்கள். வர்ணக் காகிதக் குடையின்கீழ் அரசு செலுத்திப் பவனிவரும் அந்தப் பிள்ளையார் இந்தக் கள்ளங் கபடற்ற குழந்தைகளின் விளையாட்டிலே ஈடுபடாமலிருக்கமுடியுமா ?

ஆற்றங்கரையை அடுத்த தோப்பு. தரையிலே தாழம்பாய்களை விரித்துக்குவியல் குவியலாய் 'பிட்டு'ச்சமைத்துக் கொட்டப்பட்டிருக்கும். சோலையிலுள்ள மலர்களின் மணத்தைச் சுமந்து வரும் தென்றல், நெய் வாசனையுடன் கூடிய 'பிட்டின்' மணத்தையும் கொணர்ந்து வீடுகள்தோறும் இறைக்கும். ஆற்றிலே வெள்ளம். வீட்டிற்கு ஒரு ஆள் விகிதம் வந்து மண் கொட்டி ஊரைக் காக்கவேண்டும். எளிய கிழவி. பிட்டுச்சமைத்துவிற்பவள் அவளுக்கு ஆள் யாருமில்லை. எம்பெருமான் வந்து பிட்டுக்கு மண் சுமந்து நிற்கிறார் எளிய கூலியாளாக, அது மட்டுமா? வேலை செய்யவில்லை. பாண்டியன் பிரம்பினால் அடித்துவிடுகிறான்.

உயிர்க்குலமெல்லாம் ஒன்று என்ற உண்மையை உலகம் உணர வேண்டும். அந்தப் பரம்பொருள் ஒன்றே உயிர், உலகமெல்லாம் அதன் உடல்கள், என்ற உண்மையைப் பாண்டியனுக்கு எப்படிக் கற்பிக்கமுடியும்? சொக்கலிங்கப்பெருமான் முதுகிலே அடி விழுந்ததோ இல்லையோ? துடித்தான் அவன், அவன் முதுகிலும் 'சுரீல்' என்றது. அந்தப்புரத்திலிருந்த இராசமாதேவி முதல் எல்லா சராசரங்களின் முதுகிலும் அந்தப் பிரம்படி விழுந்துவிட்டது. அரசனுக்கு ஞானோதயமாகிறது. இந்த அற்புதமான சரித்திரத்தை மதுரையில் ஆவணிமூலத் திருவிழாவில் இன்னும் காண்கிறோம். எத்தகைய பெரிய உண்மையை எவ்வளவு எளிமையாகக் காட்டிவிட்டார் எம்பெருமான்! என்று அதிசயிக்கிறோமல்லவா ?......இன்னும் எவ்வளவோ அற்புதங்கள் ஆவணியிலே. வைஷ்ணவ பயிரைத் தழைக்கச் செய்த பெரியவாச்சான்பிள்ளை அவர்களது பிறந்த நாளும், மாறனார், குலச் சிறையார், இவர்களது பெருமையும் ஆவணிக்கே உரியது.

# 8

அமிருதவல்லியம்மாளின் சகோதரி கல்யாணியம்மாளுக்கு அதிகமான செல்வம் இல்லையெனினும் நல்ல குணமும் போதுமான பணமும் இருப்பதால் கஷ்டம் என்பதே தெரியாது. அந்தம்மாளுக்கு ஒரே பெண்ணும் ஒரே பிள்ளையுந்தான். பிள்ளையை விடப் பெண் மூத்தவளாதலால் அவள் புக்ககத்திற்குப் போய், குழந்தைக்கும் தாயாகிவிட்டாள்.

பிள்ளைக்கு 20 வயதாகிறது. அவன் இயற்கையிலேயே நல்ல கட்டுமத்தான சரீரமும், கம்பீரமான தோற்றமும், வசீகரம் பொருந்திய முகக்களையும் காண்போர் உள்ளத்தைக்கவரும் தன்மையும் வாய்ந்த சிறந்த வாலிபன். அவன் M. A. பாஸ் செய்து விட்டு தற்சமயம் காம்பெடிஷன் பரீக்ஷைக்குப் படிக்கிறான்.

கல்யாணியம்மாள் சந்திராவின்மீது உயிரையே வைத்திருக்கிறாள். தனக்கே மருமகளாக வரவேண்டுமென்று அளவற்ற ஆசையுண்டு. அவள் குமாரனாகிய ஸாரநாதனுக்கும் சந்திராவை மணப்பதில் வெகு திருப்தி. ஆனால் "லக்ஷாதிகாரியாய் ஏகபோக ராணியாயிருக்கும் அவள் தன்னை மணப்பாளா?" என்று ஒரு சிறிது அச்சம்மட்டும் அவன் மனத்தில் ஊடே உலாவிக்கொண்டிருந்தது.

தாயும் மகனும் சந்திராவைப் பார்ப்பதற்கும் கல்யாண பிரஸ்தாபம் ஏதாவது செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதற்குமே இந்த கிரகப்பிரவேசத்திற்கு வந்தார்கள். சந்திராவின் அழகையும் வசீகரத்தையும் கண்டு கல்யாணியின் ஆவல் அதிகரித்ததால் எப்படியாவது தன் சகோதரியிடத்தில் இந்த விஷயத்தைப் பற்றி பிரஸ்தாபம் செய்து விடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, "அம்ருதா! சந்திராவுக்குக் கல்யாணம் செய்ய இன்னும் பிரயத்தனப்படவில்லையா! அவளை நீ உன் மகள்போல் வளர்த்தாய்; வளர்க்கிறாய். உன்னைவிட்டு அவள் அசலில் போகாதபடி உன் அருகிலேயே இருக்கும்படியான இடமாகச்செய்தால் வெகு நன்றாயிருக்குமல்லவா?"...என்று மெல்ல ஒரு சாடுவிட்டாள்.

அமி:—வாஸ்தவந்தான். அவளுடைய பெற்ற தகப்பனாரின் விருப்பப்படியே ஹானர்ஸ் பாஸ்செய்தபிறகுதான் கல்யாணத்தைப் பற்றி நினைக்கவேண்டுமென்று என் கணவர் சொல்கிறார். கல்யாணத்தைச் செய்துவிட்டால் பிறகு படிப்புக்கு ஹானிவரும் என்பது அவரது அபிப்பிராயம். சந்திராவுக்குத் தகுந்தவரன் என்னைச் சுற்றி எங்கு பார்த்தாலும் இல்லையே அதுதான் கவலை...

கல்:—என் அமிருதா! நம்ம ஸாரநாதனை நீ மறந்துவிட்டாயா! அவனுக்கு அழகிலோ, படிப்பிலோ, புத்திசாலித்தனத்திலோ, சிறந்த குணத்திலோ ஏதாவது குறைவு உண்டா! லக்ஷக்கணக்கில் பணமில்லை என்கிற ஒரே ஒரு குறையைச் சொல்லலாம். அதுவும் கூடிய சீக்கிரத்திலேயே தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன். என் கணவர்

பென்ஷன் வாங்கினல் கம்யுடேஷன் பணம் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வரும், அதைப் போட்டு அப்படியே பெரிய பங்களா கட்டிவிடலாம் என்று ஸாரநாதன் சொல்கிருன்.

என் பங்காளி யொருவருக்குப் பிள்ளையில்லாததால் அந்த சொத்து ஸாரநாதனுக்குத்தான் கொடுக்கப்போவதாயும் அதைப் பற்றி வில்கூட எழுதிவிட்டதாயும் தெரிகிறது. வருஷத்தில் ஸார நாதன் படிப்புக்காக 1000 ரூபாய் அவர் கொடுத்து வருவது உனக்கே தெரியும். அவருக்கு ஒரு லக்ஷத்திற்குமேல் சொத்து இருக்கிறதும் நீ அறிந்ததேயாகும். ஆகையால் நீ சந்திராவைக் கொடுக்கும்படி அத்திம்பேரிடம் சிபார்சு செய்யக்கூடாதா? ஸாரநாதனுக்குள்ள பிரேமை சொல்லமுடியாது. சந்திராவின் பெயரெடுத்தாலே அவன் முகம் மலர்ந்துவிடுகிறது. என்ன சொல்கிருய்? இதில் இரண்டில் ஒன்று தெரிவதற்காகவே நான் வந்தேன்.

இதைக்கேட்ட அமிருதவல்லியம்மாளுக்கும் சற்று உசித மாகவே தோன்றியது. பங்காளியின் சொத்துக்கள் சேர்ந்தால் சந்திராவின் ஸ்திதிக்குச் சரியாகிவிடுமாகையால் பார்க்கலாம் என்று தோன்றியதால், "கல்யாணீ! ஸாரநாதனைப்பற்றி நான் மறந்துவிட்டதாக நினைக்காதே. அவனுக்கு சகலவிதத்திலும் யோக் கியதை உண்டு. உன் அத்திம்பேரே அவனைப்பற்றிப் பேச்சு எடுக் கட்டும். அதன்பிறகு நான் சொல்லலாம் என்றிருந்தேன். அவரிடம் பிரஸ்தாபித்து உனக்குச் சொல்கிறேன்... நீ என்ன அவரிடம் பேசாதவளா! நேரிலேயே போய்க்கேளேன்" என்ருள். கல்யாணி யும் அதற்குச் சம்மதித்தாள்.

இவர்களுடைய சம்பாஷணைகள் முற்றும் அடுத்த அறையி லிருந்தபடியே ஸாரநாதன் கவனித்துப் பூரிப்பை அடைந்து, அந்த வேகத்துடன் சந்திராவின் அறைப்பக்கம் ஓடினன். அவள் அப்போதுதான் காலேஜுக்குப் போயிருப்பது நினைவிற்கு வந்தது. அவள் ரூமுக்குள் சென்று அந்த இடங்களைப் பார்ப்பதே அவனுக் கோர் ஆனந்தமாயும், புதிய உத்ஸாகமாயும் தோன்றியதால் அவள் உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்து அவளுடைய அற்புதமான கையெழுத்து நோட்டுப் புத்தகங்களைக் கண்டு களித்தான். சந்திரா வரும்போதுதான் இதே இடத்திலிருந்து அவளுடன் பேசவேண்டும் என்று எண்ணி அங்கேயே உட்கார்ந்திருந்தான். சந்திரா எப்போது வருவாள் என்று அவன் மனது எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

## 9

எந்த விஷயத்திலும் ஒரு கல்வரமோ, அற்ப சந்தேகமோ, கோளாருே தோன்றிவிட்டால் அதுவே மனத்தில் அறுத்துக் கொண்டிருப்பதும் அதுவே சிலருக்கு வியாதியாக மாறிப்போய் விபரீதத்தில்கொண்டுவிட்டுவிடுவதும் பிரத்யக்ஷமாகக்காண்கிருேம்.

முதலியார் சாதாரணமாகக் கல்லைப் போடாமல் பெரும் பாறையையே தூக்கித் தலையில் போட்டதுபோல் பெரிய கலக்குக் கலக்கிவிட்டதால் நரஸிம்மனின் மனது அப்படியே உடைந்துபோய் தத்தளிக்கின்றது. "பங்களா வெகு அழகாக இருக்கிறதென்பதை மட்டும் கண்டு மோகித்து இதைப்பற்றி பிறரை ஒரு வார்த்தைகூட விசாரிக்காமல் வாங்கிவிட்டோமே! 15 ஆயிரம் ரூபாயிக்கு இத்தனை பெரிய பங்களா வருவதை வெகு நயமாகக் கிடைப்பதாயும் பிறருக்குத் தெரிந்தால் ஒருவேளை போட்டியோ, விலை உயர்வோ உண்டாகிவிடும் என்றும் எண்ணி வெகு ரகஸியமாக வாங்கிய முட்டாள்தனத்திற்கு இனி என்னசெய்வது?" என்று பெருங்குழப் பத்துடனிருக்கையில், மற்றொரு தெரிந்தவர் தாம்பூலத்திற்குவந்தார்.

நரஸிம்மனின் முகத்திலுள்ள கலவரத்தைக்கண்டு, "நேற்றைய அலைச்சலோ சார்! ஒருமாதிரி இருக்கிறீர்களே?" என்றார். தனது நிலைமையைக் கூறவும் முடியாததால் 'ஆம்' என்று தலையை ஆட்டி விட்டு, "வாருங்கள் சார்! வீட்டைப் பார்க்கலாம்" என்றார்.

வந்தவர், "ஓ! இந்த வீட்டில் நான் குடியே இருந்திருக் கிறேன். மாதம் 200 ரூபாய் வாடகை பேசி இரண்டு மாதத்துப் பணத்தை அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டுவந்தோம். ஒரே வாரந் தான் இதில் இருந்தோம்; பிறகு போய்விட்டோம்" என்றார்.

ஏற்கெனவே உள்ள குழப்பம் பின்னும் அதிகரித்ததால் நர ஸிம்மனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "400 ரூபாயைக் கொடுத்து விட்டா ஒரு வாரத்தில் போய்விட்டீர்கள்? ஏனப்படி? திடீரென்று மாற்றல் ஏதாவது வந்துவிட்டதா! பணம் திரும்பி வந்ததா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

வந்தவர்:—ஊம்... அதைப்பற்றி இப்போதென்ன? எங்கள் கதையே வேறு....நான் வரட்டுமா?...

நர:—இல்லை... இல்லை... நீங்கள் ஏதோ விஷயத்தை ஒளிப்ப தாகத் தெரிகிறது. அதைச் சொல்லத்தான்வேண்டும். என்னவாவது கிரக விசேஷம் உண்டா?...

வந்:—அதைப்பற்றி இனி எதற்கு சார்? வீண் கலவரமும் மனத்தாங்கலும் வேண்டாம். இந்த வீடு வாங்குவதற்குமுன் எனக்குத் தெரிந்திருந்தால் இது வேண்டாம் என்று சொல்லியிருப் பேன். வாங்கியபிறகு கோயிலும் அபூர்வமாகக் கிடைத்தபிறகு இனி கவலை என்ன?....நான் வருகிறேன்.

நர:—சார்! எதுவாயினும் சரி. அனுபவிக்கவேண்டுமென்றிருந் தால் அது விடாது. விஷயம் தெரிவதால் என்ன கெடுதல்? சொல்லும் பரவாயில்லை. எனக்கதனுல் அதிர்ச்சியே இல்லை. சொல்லும். எனக் கும் தெரியவேண்டுமோ இல்லையோ! அதற்குத் தக்க பரிகாரம் செய்யலாமல்லவா!

வந்:—சார்! உலகம் பலவிதம். எது நிஜமோ, எது பொய்யோ எனக்குத் தெரியாது. அது பகவானுக்கே வெளிச்சம். நான் இந்த

வீட்டின் அழகில் மயங்கிதான் குடிவந்தேன். இந்த வீட்டில் ஏதோ துர்தேவதைகள் இருப்பதாயும், சில வருஷங்களுக்குமுன் இந்த வீட்டில் கொலை நடந்திருப்பதாயும், அந்த ஆவி பங்களாவில் சுற்றியலைவதாயும், இரவில் பயங்கரமான சப்தம் கேட்பதாயும், கனவுகள் கெட்டதாகத் தோன்றுவதாயும் நான் குடிவந்த மறு நாள் தகவல் கிடைத்தது. அதற்கேற்றாற்போல் எனது சிறிய குமாரத்திக்கு அன்றே திடீரென்று ஜுரங்கண்டு, வலிப்புபோல் வந்துவிட்டதும் எங்கள்பாடு வெலவெலத்துப்போயிற்று. ஏதோ கோரமான சப்தம் கேட்பதுபோல் என் சம்சாரத்திற்குத் தெரிந்ததாம். கொலை நடந்த வீடு என்றாலே பயந்தானே சார்! அதனால் நான் உடனே போய்விட்டேன். இந்த வீட்டில் இத்தகைய ஊனமிருப்பதால்தான் குடியும் வரமாட்டேன் என்கிறார்கள். விலைக்கும் வாங்க பயந்தார்கள். நீர் துணிவுடன்தான் வாங்கினீர் என்று நான் நினைத்தேன்...சரி. அதைப்பற்றி வீண் கவலைப்படவேண்டாம். சரியான சாந்தி செய்துவிட்டால் போகிறது" என்று கூறிச்சென்றார்.

எரியும் அடுப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் ஆயிற்று. எத்தகைய தைரியசாலிகளாயிருந்தாலும் பயங்கரமான வார்த்தைகளைக் கேட்டபோது இதயம் திடுக்கிட்டலறுவது சகஜந்தானே! திக்கற்ற குழந்தைக்கு ஒரு நல்லதைச் செய்துவைக்க எண்ணியதற்கு மாறாகத் தீமையை விலை கொடுத்து வாங்கியதுபோலாகி விட்டதே! என்ன செய்வது, அந்த வீட்டுக்காரப்பாவிக்கு இத்தனை வஞ்சக எண்ணமா! த்ரோகபுத்தியா!" என்று இடிந்துபோன சமயம் அம்ருதவல்லியம்மாள் அங்குவந்தாள்.

தன் கணவனின் முகமாறுதலைக்கண்டு "என்ன சமாச்சாரம்? ஏன் ஒருமாதிரியிருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா?" என்றாள். நரஸிம்மன் ஒன்றும் பதில் சொல்லாது எழுந்து வந்து அமிருதவல்லியோடு தோட்டத்தில் தூரத்து இடத்திற்குப்போய், இந்த விஷயங்களை மெல்லியகுரலில் கூறி "இனி என்ன செய்வது? அமிருதா! இந்த பயங்கரமான விஷயத்தை வெளியில் மூச்சுவிடாதே. குழந்தைகள் காதில் கேட்டால் அனர்த்தமாக விளையும். எனக்கு இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. மூளை கலங்கிவிடும் போலிருக்கிறது" என்றார்.

மகா பரிசுத்தவதியும், சிறந்ததெய்வபக்தியுள்ளவளுமான அமிருதவல்லியம்மாளுக்கு மட்டும் இதைக் கேட்டதும் திடுக்கென்று அலறவே இல்லை. வேதாந்த ஸாரம் படித்த விவேகியாதலால் வைராக்கியமும், வேதாந்தமும் பேசத்தொடங்கி, "இதற்காகவா இத்தகைய பயத்தை அடைந்து கலங்கிவிட்டீர்கள்? ஸ்வாமீ! நான் ஏதாவது சொன்னால் வேதாந்தப்பழம், முற்றுந் துறந்த ஞானி என்றெல்லாம் பரிகஸிக்கிறீர்கள். இந்த பங்களாவைப்பற்றி யார் எதைச் சொல்லியபோதிலும் நீங்கள் சற்றும் கலங்கவே வேண்டாம். என்னப்பன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அபூர்வ பிம்பம்

புதைந்து கிடந்ததால் அந்த மூர்த்தியை வெளியே எடுக்கும் நோக்கத்துடன் ஏதாவது அடையாளங்கள் தென்பட்டிருக்கலாம். எம்பெருமான் கோயில்கொண்டிருக்கும் இடத்தில் பேயாவது, பூதமாவது, பிசாசாவது? எனக்கு இவைகளில் சற்றும் நம்பிக்கையே இல்லை. நீங்கள் அந்த கிருஷ்ண பகவானை நம்பி அவன் பாதமேகதி என்று இருங்கள். எத்தகைய விபரீதத்தையும் அவன் நொடிப்பொழுதில் போக்கிவிடுவான். இம்மாதிரி பிறர் சொல்லியதாகக் கூட நீங்கள் பிறரிடம் சொல்லவேண்டாம். என்னதான் நடக்கிறதோ பார்க்கலாம் என்று தைரியமாக இருங்கள்'' என்று தேறுதல் கூறினள். எது சொல்லியும் நாஸிம்மனின் மனது சமாதானமடையவில்லை. "இந்த பங்களா ஒதுக்குப்புறமாயிருக்கிறது. போது போகவில்லை''என்று கூறிக்கொண்டு நாம் பழய பங்களாவுக்கே போய்விடலாமா?'' என்றார்.

அமி:—வீண் பீதியும் பயமும் வேண்டாம். நாம் அம்மாதிரி உடனே செய்வதுதான் குழந்தை சந்திராவுக்குச் சந்தேகம் உண்டாகும். அதற்கு இடங்கொடுக்கக்கூடாது. பரதேசிக் குழந்தைக்கு ஒரு விபத்தும் வராது அந்த கண்ணன் காப்பாற்றுவான். நம்பியவர்களைக் காக்காது கைவிட்டு வேடிக்கை பார்ப்பதற்கு அவனுடைய இதயம் உலர்ந்த பாலைவனமா! வாத்ஸல்யம் நிறைந்தவாரிதியல்லவா! நீங்கள் கவலைப்படாதீர்கள். என் வார்த்தையை நம்புங்கள். அப்படி ஏதாவது உங்களுக்கு பயங்கரமாகத் தென்பட்டால் அதன்பிறகு பார்க்கலாம். வீண் கிலிக்கு இடங்கொடுக்க வேண்டாம். 'புலி கோல்லாது; கிலி கோல்லும்'என்பது பழமொழி. நீங்கள் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு இன்று ஆபீஸுக்குப் போங்கள்'' என்றாள்.

நாஸிம்மன் முகத்தில் தட்டிய அசட்டுக்களை மாறவே இல்லை. அமிருதவல்லியுடன் கோயிலுக்குச் சென்று அந்த பகவானை வணங்கி "என்னப்பனே! கிருஷ்ணா! இந்த க்ருகத்திற்குள் நீ மறைந்திருந்தும் வீண் பீதியை ஜனங்கள் எப்படி அடைந்தார்களோ தெரியவில்லை. இப்போதோ நீ வெளிப்பட்டு ரக்ஷிக்கக் காத்திருக்கிறாய். எத்தகைய விபத்துக்களோ, துர்தேவதைகளின் சேஷ்டைகளோ இருப்பினும் உன் கையிலுள்ள குழலால் ஊதித் தள்ளிவிட மாட்டாயா! நீ பக்தவத்ஸலனல்லவா! அன்பர்களிடம் வாத்ஸல்யத்தை மழைபோல் பொழிந்து காக்கும் கருணைவள்ளலல்லவா!

என்னுயிர் நண்பனுக்கு நான் ஆதியில் த்ரோகம் நினைத்தும் அவனது பரிசுத்தமான த்யாகஜோதி என்னையும் பரிசுத்தமாக்கித் தனது ஒப்பற்ற செல்வக் குழந்தையையும், அளவற்ற செல்வத்தையும் என்னிடமே ஒப்படைத்துப் பின் உயிர் நீத்தான். அவன் விருப்பப்படி அந்த பரதேசிக் குழந்தையைக் காப்பாற்று. அதற்கொரு தீமையும் நேராத வண்ணம் பார்த்துக்கொள்ளு. என்னை

சோதிக்காதே. எவ்விதமான அபவாதத்தையும் உண்டாக்காதே'' என்று பிரார்த்தனை செய்துவந்தார்.

எத்தனைதான் மனத்திற்குச் சமாதானத்தை உண்டாக்கிக் கொண்டாலும் சாந்தி ஏற்படவே இல்லை. இலையில் சாப்பிட உட்கார்ந்தால் நரஸிம்ஹனை யறியாது கண்கள் நாலாபக்கமும் சுழலுகின்றன. மிரண்ட பார்வையுடன் நெஞ்சில் திக்கு திக்கு என்று அடித்துக்கொள்கிறது. அவர் இயற்கையிலேயே மகா பயந்தவர். தனியே தோட்டத்துக்கு இரவில் போகவேமாட்டார். தான் மகா தைரியவான்போல் விளக்கெடுத்துக்கொண்டு வெளியில் கிளம்பினால் அமிருதவல்லியம்மாள் பின்னோடு வருவார்கள். அத்தகைய மனிதன் இத்தகைய பயங்கரமான விஷயத்தைக் கேட்டால் எப்படி பயப்படாமல் இருக்கமுடியும்? ஏதோ ஒருவாறு சாப்பாட்டை முடித்துக்கொண்டு கிளம்பினார். ''அமிருதா! இன்று நான் ஏற்கெனவே லீவு எடுத்திருக்கிறேன். ஆபீஸுக்குப் போகவில்லை. என் மனத்தில்மட்டும் ஏதோ ஒரு திகில் புகுந்து வேலை செய்கிறது. சற்று நேரம் தூங்கிப் பார்க்கிறேன். யாராவது வந்தால் கூப்பிடு'' என்று சொல்லிச் சென்றார்.

''சந்தோஷமான வாழ்க்கைப் பாதையில், கலக்கமாகிய முள்ளை எப்பாவிகளோ போட்டுவிட்டார்களே! சந்திராவும் இந்திராவும் இவருடைய மாறுதலைக் கண்டு என்னவென்று கேட்டால் என்னசொல்வது? இவருடைய பயத்தையும் கலவரத்தையும் எவ்வாறு மாற்றுவது?'' என்று பெரிய கவலையுண்டாகியதால் தன் சகோதரி கல்யாணத்தைப்பற்றிப் பேசியதை நினைக்கக்கூட நேரமில்லாதுபோயது.

## 10

ஆகாயமும் பூமியும் ஒன்றாய்ச் சுழலும் நிலைமையை அடைந்த சந்திராவுக்கு, தான் இருப்பது காலேஜ் என்பதுகூட மறந்துபோயிற்று. கடிதத்தைப் பலதரம் திரும்பத்திரும்பப் பார்த்து அப்படியே வரிவரியாக மனத்தில் பதித்துக்கொண்டாள். 'அந்தோ! அவருடைய வீடு என்று தெரிந்திருந்தால் நான் விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக அவர்கள் என்ன கஷ்ட காலத்திற்காக விற்றார்களோ, அந்த கஷ்டத்திற்குத் தக்க பண உதவியைச் செய்து ''விச்ராந்தியில்'' அவரை சந்தோஷத்துடன் என்றும் நிலைத்திருக்கும்படிச் செய்திருக்கலாமே...

அந்தோ! தான் வாழ்ந்த உன்னத பங்களாவை விற்பதும், அதை நானே வாங்கி அதில் அவரை வரும்படியாக அழைப்பதும் என்னே கோரமான சம்பவம்! யாருக்காவது மனம் வருமா! அவரை இனி பார்க்கமுடியாதென்று வேறு எழுதியிருக்கிறாரே!

என்ன செய்வது? என் பிதாவிடம் எப்படியாவது சிபார்சு செய்து இந்த வீட்டை அவருக்கே திருப்பிக்கொடுத்துவிடலாமா!...ஹா! அது நடக்கக்கூடிய காரியமா?'' என்றெல்லாம் தத்தளிக்கிறாள்.

முகத்தில் சோகமும் பிரேமையின் வேகத்தின் காந்தியும் அதற்கு ஏற்பட்டுள்ள பரிவும் ஒன்று கூடி வதைக்கிறது. இத்தகைய மாறுதலைக் கண்டு வீட்டில் கேட்டால் என்ன பதில் சொல்வது என்கிற கவலை வேறு வாட்டுகிறது. இந் நிலைமையில் அங்கு உட்கார்ந்து படிக்கவும் எழுதவும் மனது நாடவே இல்லை. அவளுடைய சினேகிதைகளும் மற்றவர்களும் முதல்நாளைய கிரகப் பிரவேசத்தைப்பற்றிக் கொண்டாடிப் பேசவும், பங்களாவின் அழகை வர்ணிக்கவும்,சாப்பாட்டு ருசியைப்புகழ்ந்து பேசவும் ஆரம்பித்தார்கள்.

சந்திரா மெல்ல தன்னைச் சமாளித்துக்கொண்டு பதில் சொல்லி அவர்களை த்ருப்தி செய்துவந்தாள். சாயந்திரம்வரையில் எப்படி இங்கு காலத்தைக் கடத்துவது என்று தோன்றியதால் பிற்பகல் அவளுக்குக் கார் வருவதற்குள்ளாகவே வழக்கத்திற்கு விரோதமாக வாடகை வண்டியில் வீட்டிற்கு வந்துவிட்டாள்.

அவள் தனக்கென்று நியமித்துக்கொண்டுள்ள அறைக்கு நேரே சென்றாள். அங்கு ஸாரநாதன் அவளுடைய சோபாவில் உட்கார்ந்து ஒரு நாவலைப் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் தன் முகத்தின் மாறுதலை மறைத்துக்கொண்டு "ஓ! என்ன புத்தகம் படிக்கிறாய்? வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கிறதா?'' என்றாள்.

சந்திராவின் தரிசனத்திற்கே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஸாரநாதனுக்கு அவளைக் கண்டதும் இதயத்தில் புதிய உத்ஸாகமும் சக்தியும் உண்டாகி முகம் அப்படியே சந்திரனைக் கண்ட ஆம்பல்போல் மலர்ந்தது. "என்ன சந்திரா இதற்குள் வந்துவிட்டாய்!'' என்றான்.

சந்:—அலுப்பாக இருந்தது. சற்று நிம்மதியாகத் தூங்கலாம் என்று வந்தேன். பாடமும் ரொம்ப இல்லை....ஏது? நீ இங்கு உட்கார்ந்திருக்கிறாய்?

ஸார:—ஏன்? உன்னுடைய ரூமில் உட்காரக்கூடாதா! சொல்லிவிடு. போய்விடுகிறேன். வீட்டின் அழகைப் பார்த்துக்கொண்டே வந்தேன். இந்த ரூமில் இந்த ஸ்வாரஸ்யமான புத்தகம் கிடைத்தது. படித்தவாறு உட்கார்ந்தேன். நேரம் போவதே தெரியவில்லை.

சந்:—உன்னை வரக்கூடாதென்று சொல்வேனா, குதர்க்கமாகப் பேசுகிறாயே! கருத்தைக் கவரும் அத்தகைய நாவல் எது... இப்படி கொண்டா!

ஸார:—இரு; இரு. சந்திரா! நான் ஊருக்குப்போனதும் நீயே படித்துக்கொண்டிருக்கலாம். உன்னோடு பேசுவதற்குக்கூட நேரம் கிடைக்கமாட்டேன் என்கிறது. அத்தனை ஜோலி உனக்கு. முன்பெல்லாம் இந்த ஏழையின் குடிசைக்கு வருஷம் ஒரு முறையாவது லீவுக்கு வருவாய்: இந்திராவுக்கு விவாகமாகியபிறகு

அதுவும் நின்றுவிட்டது. உங்களையெல்லாம் பார்ப்பதற்காகவே நான் இந்த கிரகப்பிரவேசத்திற்கு வந்தேன்.

சங்:—பேஷ்! ரொம்ப சந்தோஷம். பிழைத்துக்கிடந்தால் அடுத்த லீவுக்குக் கட்டாயம் உங்கள் வீட்டிற்கும் இந்திராவின் வீட்டிற்கும் பங்கு போட்டுக்கொண்டு வரப்போகிறேன். சித்தியம்மாவிடம் இருக்கவும் அவர்கள் கைப்பாகத்தைச் சாப்பிடவும் ஆசையாயிருக்கிறது. அவர்கள் செய்யும் பக்ஷணங்கள் தின்பதற்கு நாக்கில் ஜலம் சொட்டுகிறது.

ஸார:—ஓ! இப்போது அம்மா சமைப்பதில்லையே! பரிசாரகன் இருக்கிறான். உனக்குத் தெரியாதா! உனக்கென்று அம்மாளே செய்து இப்போதும் போடுவாள். நீ என்றால் அம்மாவுக்கு உயிரல்லவா!... சரி. இன்றிரவு நாங்கள் ஊருக்குப்போகிறோம். மறுபடியும் எப்போது உன்னைப் பார்க்கலாம்...லீவுக்குதானே! அல்லது மத்தியில் உனக்குக் கல்யாணம் நேர்ந்தால்...

சங்:—என் இழுத்தாற்போல் பேசுகிறாய்! கல்யாணம் நேர்ந்தால் நீதானே எனக்கு அண்ணன் ஸ்தானத்தில் பொறியிட்டு என் கணவனுக்குத் தாப்பூலம் கொடுத்து எல்லாம் செய்யவேண்டும். நீதானே முதலாளி—என்றாள்.

இதைக்கேட்டதும் ஸாரநாதனின் மனது வெடித்துவிடும் போலாகிவிட்டது. சந்திராவின் வாயிலிருந்து என்ன அபிப்பிராயம் வருமோ! என்று அறிவதற்காகவே அவன் அவ்வாறு கேட்ட மர்மத்தை இவள் அறியமுடியுமா! இந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டுவந்த அமிருதவல்லியம்மாள் சிரித்துக்கொண்டே "என்ன கண்ணம்மா! கல்யாணம் பொறியிடல் எல்லாம் வந்துவிட்டது. கணவன் பார்த்தாகிவிட்டதா! ஒருகால் ஸாரநாதனே உனக்குக் கணவனாகும்படி பிராப்தம் வந்துவிட்டால்?" என்று கூறி கபகப வென்று சிரித்தாள்.

அமிருதவல்லியம்மாளின் கருத்தை யறிந்த சந்திராவின் மனது திடுக்குற்றது. "கணவனா!...என் இன்ப ஸ்ரீதரனை விட்டு இன்னொரு மன்மதன் நேரே இறங்கி வந்தாலும் எனக்கு என்ன ஆகவேண்டியது? என் வாழ்க்கையின் விளக்கு அவருடைய திருக்கரத்தில் அல்லவா பிரகாசிக்கின்றது. அவ் விளக்கு மறு கரத்திற்கு ஏது? இதென்ன புதிய புதிய சங்கடமாகவிருக்கிறதே. அம்மாவின் அபிப்பிராயம் ஒருகால் இதுதானோ! தன் சகோதரியின் மகனுக்குத்தான் என்னை நிச்சயம் செய்திருக்கிறார்களா! அடடா! இப்படியொரு எண்ணம் வளர நாம் இனி இடந்தரலாகாது" என்று ஏதோதோ யோசனையிலாழ்ந்திருக்கும் சமயம் சேகர் அங்கு வந்ததால் அமிருதவல்லியம்மாள் போய்விட்டாள்.

சேக:—ஓ! ஸாரநாத்! ஸினிமாவுக்குப் போகலாமென்று தீர்மானித்திருக்கிறேன். வருகிறாயா!....என்ன சந்திரா! ஒரு தமாஷ் ட்ரிப். போய் வரலாமா! கிளம்பு...

சந்தி:—அத்திம்பேர்! என்னை மன்னிக்கவேண்டும். எனக்குத் தலைவலி அதிகமாகவிருக்கிறது. சினிமா பார்க்கமுடியாது. நீங்களெல்லோரும் போய் வாருங்கள்...

சேக:—தலைவலியா?....என்...மருந்து சாப்பிட்டாயா!...தலைவலிமாத்திரை வேண்டுமா?...இதெல்லாம் என்னிடம் ஸ்டாக்கில் இருக்கும் மருந்துகளாகும். இதோ கொண்டு வருகிறேன்—என்று ஓட்டமாக ஓடி மாத்திரையும் ஜலமும் கொண்டு "இந்தா! சாப்பிடு" என்று கொடுத்தான்.

உண்மையில் மனத்திலுண்டாகியிருக்கும் அதிர்ச்சியில் தலைவலி பாதிக்கின்றதால் மாத்திரையை வாங்கிச் சாப்பிட்டாள். இதைக் கவனித்துக்கொண்டே வந்த இந்திரா உதட்டைக் கடித்துக்கொண்டு விறைக்கவிறைக்கப் பார்த்தபடியே நின்றாள். 'சரிதான். உத்யோகம் நன்றாகத்தானிருக்கிறது' என்று தனக்குள் கூறியபடியே விற்றென்று போனாள்.

அவள் வந்ததையோ, போனதையோ யாருமே கவனிக்கவில்லை. சந்திராவுக்கு உண்மையில் இவர்களெல்லாம் எழுந்து போனால் போதும்போல் தோன்றியதால் பேசாமல் குப்புறப் படுத்துக்கொண்டாள்.

சேகர்:—ஸாரநாத்! நாம் வெளியே போகலாம். சந்திரா நிம்மதியாக ஓய்வு எடுத்துக்கொள்ளட்டும்—என்று அவனை அழைத்துக் கொண்டு போனான். சந்திராவுக்கு அவர்கள் போனது மிகவும் சமாதானமாகவிருந்தது. ஏற்கெனவே மனத்தில் வேலை செய்யும் வேதனை மீண்டும் தலைதூக்கவாரம்பித்தது. அதோடு அமிருதவல்லியம்மாள் இன்று புதிதாகக் கூறிய ஒரு வார்த்தை அவள் நெஞ்சில் பின்னும் வாள்கொண்டறுத்தது. ஒன்றுக்கிரண்டு கவலைகள் புகுந்துகொண்டு வாட்டினால் சிறுமி என்னதான் செய்வாள் பாவம்! மனது குழம்பித் தவிக்கிறது. கவலையறியாதிருந்த மனத்தில் திடீரென்று அபாரமான கலக்கம் உண்டாகியதும் சந்திராவின் நிலைமை பரிதாபகரமாய்த் தோன்றியது.

## 11

சினிமா போவதற்காக மிக்க அலங்காரம் செய்துகொண்டு கிளம்பிய இந்திரா இங்கு வந்து பார்த்துவிட்டபிறகு அவளை யறியாமலேயே நெஞ்சில் ஒருவிதமான சந்தேகம், பொறாமை, ஆத்திரம் முதலியன உண்டாகி அவளுடைய மூளையைக் கலக்கிவிட்டதால் தடதடவென்று சென்று ஆடம்பரமாய் அலங்கரித்துக்கொண்டிருந்த உடைகளை மாற்றிவிட்டுப் பழய உடையுடன் கோபாவேசமாய் சோபாவில் படுத்துவிட்டாள்.

தன் கணவன்மீதும் சந்திராவின்மீதும் அளவிடமுடியாத சந்தேகமும் ஆத்திரமும் 'குபீர், குபீர்' என்று பொங்கி வருவதைச் சகிக்கமாட்டாது அழுகை வந்துவிட்டது. "அனுதையாகக் கிடந்த பிணத்தை என் பெற்றோர்கள் எடுத்து வளர்த்து ஈரைப் பேனுக்கிப் பேனை பெருமாளாக்கி ஒரு உன்னத ஸ்திதியில் கொண்டு வைத்து உதவியதற்கு அவர்களுக்கே த்ரோகம் செய்துவிட்டுத்தான் அவள் மறு காரியம் பார்ப்பாள்போல் தோன்றுகிறதே!" என்று எண்ணும்போது தேகமே பற்றி எரிவதுபோல் தோன்றியது.

தன் கணவனை முதலில் ஊருக்கு அழைத்துக்கொண்டு போக வேண்டும். அல்லது சந்திராவை எப்படியாவது அவர் இங்கிருக்கும் வரையில் எக்காரணம் பற்றியாவது வெளியூருக்கு அனுப்பிவிட வேண்டும். இவ்விரண்டில் ஒன்று செய்யாவிட்டால் காரியம் விபரீதமாகிவிடும் என்ற ஒரு எண்ணம் அவள் மனத்தில் மலைபோல் வளர்ந்துவிட்டது. அதைத் தாங்கமாட்டாது தவித்துக்கொண்டிருக்கையில், "என்ன இது. ட்ரஸ் செய்துகொண்டதெல்லாம் இதற்குள் கலைந்துவிட்டாயே! சினிமாவுக்கு வரவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே சேகரன் வந்தான். அவனிடம் தனது மனத்தில் உள்ளதைச் சொல்லவும் அஞ்சிகையாகவிருந்தது. எதையோ சாக்கு சொல்ல எண்ணி "எனக்குத் திடீரென்று தலை சுற்றுகிறது. நான் வரவில்லை" என்றுமட்டும் பதில் சொன்னுள்.

சேக:—தலை சுற்றலா! தங்கைக்குத் தலைவலி, அக்காளுக்குத் தலைசுற்றலா! வேடிக்கையாகத்தானிருக்கிறது. இரு. இதோ வருகிறேன்" என்று கூறிச் சென்று மருந்து சகிதம் வந்து "இதைச் சாப்பிடு. சரியாகிவிடும். எழுந்திரு" என்று கூறியவாறு இந்திராவைத் தூக்கி உட்காரவைத்தான்.

இந்திராவுக்கு தர்ம சங்கடமாகிவிட்டது. மூளைசுற்றல் இருக்கிறதேயன்றி தலை சுற்றல் ஏது? உடம்பில் ஒருவிதமான கோளாறுமின்றி மருந்தை எப்படிச் சாப்பிடுவது? வேண்டாமென்று சொல்லவும் பயமாயிருந்ததால் மருந்தை வாங்கி வாயில் கொட்டிக்கொண்டு உடனே குமட்டலுடன்வாந்தி எடுப்பதுபோல் எடுத்தாள். தலைசுற்றலே பித்தத்தினுல்தான் வரும்; அதனுல் வாந்தியாகிவிட்டது என்று எண்ணி சேகர் பயந்துவிட்டான். "இந்திரா! டாக்டரை அழைக்கட்டுமா! என் வாந்தி எடுத்துவிட்டாய்! உங்கம்மாவைக் கூப்பிடுகிறேன்...ஸாரநாத்! மாமியைக் கூப்பிடு"என்றுன்.

இந்திராவுக்குப் பெரிய தொல்லையாக ஆய்விட்டது. "விளையாட்டுக்கு வியாதி என்று கூறியது வினையாகிவிடும்போலிருக்கிறதே" என்று கலங்கியவாறு எழுந்து உட்கார்ந்தாள். 'டாக்டரும் வேண்டாம்! அம்மாவும் வேண்டாம். நாம் இருவரும் ஊருக்குப் போகலாம். அங்கு போனுல் எனக்கு ஒரு உடம்பும் இருக்காது. இன்றே கிளம்புங்கள். நீங்கள் ஊருக்குப் போய்விடப் போகி

றீர்களே என்று நினைத்தேன். எனக்கு ஏதோமாதிரியாகியது. உடம்பு ஒன்றுமில்லை. நானும் கூடவே வருகிறேன்'' என்றாள்.

இந்திராவின் வார்த்தையைக் கேட்ட சேகருக்கு வியப்பே உண்டாகியது. புதிய பங்களாவை வாங்கி அதில் ஒரு மாதமாவது சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று என்னை லீவு வாங்கிக் கொண்டு வரும்படி எழுதிய அவளே திடீரென்று மறுநாளே போக வேண்டுமென்று சொல்வதைக் கேட்க வியப்புண்டாகாது எப்படி யிருக்கும்? ''இந்திரா! இதென்ன விநோதமாகப் பேசுகிறாயே! உன்னுடைய கடிதத்தைக் கண்ட பிறகல்லவா நான் லீவு வாங்கிக் கொண்டேன். இப்போது இன்றே போகவேண்டுமென்றால் நான் இங்கிருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? அப்படியானால் போய் விடுகிறேன்'' என்றான்.

அதேசமயம் ஸாரநாதன் பரபரப்புடன் வந்து, ''சார்! மாமி மாமாவிடம் இருக்கிறார்கள். மாமாவுக்கு திடீரென்று பிரமாதமான குளிர் ஜுரம் வந்து உதறுகிறது. டாக்டருக்குக் கார் போயிருக் கிறது. மாமி பக்கத்திலேயே அழுதுகொண்டு பகவானை வேண்டிய படியே இருக்கிறாள். அதனால் நான் கூப்பிடவில்லை'' என்றான்.

இதைக்கேட்ட இந்திரா அலறியவாறு 'அப்பாவுக்கு ஜுரமா!' என்று கூறியவாறு ஓடினாள். சந்திரா இன்னொரு கோடிப் பக்கத்து ரூமில் படுத்திருந்ததால் அவளுக்கு இந்த விஷயமே தெரியாது. 'ஸ்ரீதரனின் தகவலை எப்படி அறியமுடியும்?' என்கிற எண்ணத் தினால் குழம்பிக் கிடக்கும் சமயம் ஸாரநாதன் அங்கு வந்து, ''சந்திரா! உனக்குத் தலைவலி தேவலையா! அப்பாவுக்கு உடம்பு சரியில்லாததால் டாக்டர் வரப்போகிறார். அவரிடம் காட்டலாம் வருகிறாயா?'' என்றான்.

''என்ன! அப்பாவுக்கு உடம்பா! என்ன உடம்பு?'' என்று அலறியவாறு அவளும் ஓடினாள். நரஸிம்மனுக்கு குளிர் தூக்கிப் போடுகிறது. அமிருதவல்லியம்மாளின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அவருடைய மன அதிர்ச்சியின் பயமே ஜுரம் வந் திருக்கிறது என்பது நன்றாகத் தெரியும், இருப்பினும் மன வேதனை விடுமா! இந்த விபரீதமான செய்தியைக் கூற இஷ்டப்படவில்லை. வைத்தியனின் உதவியால் குணமாவதோடு பகவானின் கருணை தானே முக்கியம் என்பதால் பகவானையே பிரார்த்தனை செய்தபடி உட்கார்ந்திருந்தாள்.

சந்திராவுக்கு உண்மையில் அபாரமான திகில் உண்டாகியதால் தகப்பனாரைக் கட்டிக்கொண்டு, ''அப்பா! அப்பா! ஏன் இப்படி குளிர் நடுக்குகிறது? கிரகப்பிரவேசத்திற்கு அலைந்த அலைச்சலாக விருக்குமா! என்ன அப்பா! ஏதோமாதிரி பார்க்கிறீர்களே!'' என்று கண்ணீர்விட்டுக் கலங்கியவாறு கேட்டாள்.

நரஸிம்மனுக்கு சந்திராவின் பரிதாபம் சகிக்கமுடியவில்லை. ''சந்திரா! அழாதேம்மா! எனக்கு ஒன்றுமில்லை. மருந்து சாப்பிட்

டால் உடனே குணமாகிவிடும். பயப்படாதேம்மா!" என்று தைரியம் சொல்கிறரேயன்றி உள்ளுக்குள் பிடித்த திகில் நீங்கவே இல்லை. எங்கு பார்த்தாலும் ஏதோ உருவங்கள் தெரிவதுபோல் நடுக்கலும், விகாரமான சப்தங்கள் கேட்பதுபோல் கிலியும் உண்டாகி திடுக்குதிடுக்கென்று தூக்கிப்போடுகிறது.

உடனே டாக்டர் வந்து பார்த்து மருந்து கொடுத்தார். "வேலையின் அசதிதான். வேறென்றுமில்லை" என்றார். ஆனால் சாமானிய ஜனங்கள் வெறுமனே இருக்கிறார்களா! 'நேற்றுதான் கிரகப்பிரவேசம் வந்தார். இன்று இப்படி பிரமாத ஜுரம் வந்திருக்கிறதே! ஏதாவது கிரகதோஷமோ! கண் திருஷ்டியோ இருக்கும். மந்திரித்தால், விபூதி பிடித்தால், வேப்பிலை யடித்தால் சரியாகிவிடும்' என்று ஆரம்பித்தார்கள்.

இவைகளிலெல்லாம் அமிருதவல்லியம்மாளுக்குச் சிறிதும் நம்பிக்கையே இல்லையெனினும், ஊராருக்காக பயந்து தலையை அசைத்தாள். ஆனால் அவர் பயந்திருப்பதற்கு மந்திரத்தால் ஒரு வேளை பயம் தீரலாம் என்று மட்டும் எண்ணினள். சரியாகக் கவனித்துச் செய்யவில்லை அதனால் வந்துவிட்டது என்கிற வார்த்தைக்கு இடந்தரக்கூடாதென்பது அமிருதவல்லியின் நோக்கம்.

மந்திரவாதி வருவதற்கு இடங்கொடுத்துவிட்டால் போதாதா! விபூதி என்ன, வேப்பிலை என்ன, எலுமிச்சம்பழமென்ன! தேங்காய் கற்பூரம், சாம்பிராணி என்ன! விளக்குகள் என்ன. அப்பப்பா! தடபுடல் படுகிறது. அதிலும் பெரிய இடம் என்றால் பணங்கறப்பதற்குக் கேட்கவேண்டுமா! அதிலும் புதிய வீடு என்பது ஒரு சாக்கு அகப்பட்டது.

"அம்மா! ஐயாவுக்கு இப்போது உயிர் இருப்பதானது உங்கள் பாக்யந்தான். அவரைக் காட்டேரி அடிக்கவந்த வேகத்தில் உங்கள் பக்தி வைராக்கியத்தைக் கண்டு அடிக்காது போய்விட்டது. அந்த தேவதைக்கு 10 ரூபாய் செலவழித்துப் பொங்கல் முதலியன செய்துவிட்டால் பிறகு பயமே இல்லை" என்றான் ஒரு மந்திரவாதி.

"நவக்ரக தோஷந்தான் பலமாயிருக்கிறது. ஒரு வாரம் நவக்ரக பூஜை செய்து கும்ப ஜலம் வைத்துக்கொட்டினல் பிறகு ஆயுள் பரியந்தம் ஒரு வியாதியும் வராது. பயம் என்பதே இல்லை. அதற்கு ஒன்றும் அதிகம் ஆகாது. 50 ரூபாய் செலவு செய்தால் போதும். ஒருவார ஜபந்தான்" என்றார் ஒரு மந்திரம் தெரிந்த குருக்கள்.

"அம்மா! பூதநாடி ஓடுகிறது. கட்டாயம் வெகு அதிகமாகப் பயந்திருக்கிறார். அதற்கு அவரைப்போல் வெள்ளியில் பொம்மை செய்து கழிப்பெடுத்தால் பிறகு இம்மாதிரி என்றுமே வராது. அதற்கு பத்துவராகன் (35 ரூபாய்) செலவு செய்தால் போதும்" என்றான் ஒரு பண்டார மாந்திரீகன்.

"அம்மணி! ஐயாவுக்கு எந்தவிதமான கெட்ட குறியும் இல்லை. ஏதோ மன அதிர்ச்சியில்தான் இந்த கோளாறு என்று தெரிகிறது.

பகவத்ஸன்னிதானத்தில் ஸஹஸ்ர நாம ஜபம் செய்வித்து அந்த ஜலத்தில் ஒரு உத்தரிணி சாப்பிடக் கொடுத்து முகத்தில் இறைத்தால் எப்பேர்ப்பட்ட பீடையும் கழிந்துவிடும். ஒருவார ஜபம் ஆனதும் 50 பேருக்கு அன்னதானம் செய்தால் வெகு நல்லது. பீடா பரிகாரம், வியாதிக்குச் சாந்தியாகும்'' என்று ஒரு பெரிய வைதீகப் பழம் போன்ற கிழவர் சொன்னார்.

இதுபோல் சொல்லுவது கணக்கு வழக்கில்லை. இவைகளைக் கேட்பதற்கே அமிருதவல்லியம்மாளுக்குத் தலைவலி உண்டாகியது. "சரி! சரி! அப்படியே செய்வோம்!''என்று எல்லோருக்கும் சமாதானம் சொல்லி, கையில் ஒன்று, அரை கொடுத்தனுப்பிவிட்டாள். கடைசியில் சொல்லிய கிழவரின் வார்த்தை அவளுக்கு மிகவும் பிடித்ததாகையால் அக் கிழவரிடமே கூறி நல்ல சத்து பாத்திரங்களாக 10 பேர்களைச் சேர்த்து ஸஹஸ்ர நாம ஜபம் ஒரு வாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்தாள்.

எத்தகைய கிரகக் கோளாறுகளும் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை அந்தம்மாளுக்கு உண்டு. ஸஹஸ்ர நாம ஜபத்தினலோ, வைத்தியரின் ஊசி குத்தியதனுலோ இரண்டு மூன்று நாட்களுக்குள் ஜுரம் குறைந்து தெளிவு காணத் தொடங்கியது. சந்திராவும் இந்திராவும் தகப்பனரைவிட்டு அசையவே இல்லை. சேகரும் சாரநாதனும் வெகு அக்கரையுடன் கவனித்துவந்தார்கள்.

இந்த தடபுடலில் சந்திரா காலேஜுக்குப் போகவே இல்லை. தகப்பனருக்குக் குணமானல்போதும் என்கிற கவலையில் ஸ்ரீதரனைப் பற்றி அறிவதற்கு இடமே இல்லாதுபோனதால் அது ஒரு பக்கம் வேலை செய்துகொண்டே இருக்கிறது. உடம்பு முழுதும் குணமாகியதெனினும் நரஸிம்மத்தின் பயமோ, திகிலோ நீங்கவேயில்லை. இந்த வீட்டைவிட்டுப் போய்விடலாமா! என்கிற எண்ணம் பூர்ணமாக உண்டாகியது. அப்படித் தாம் செய்தால் பிறர் பரிகஸிக்கவும், இவ் வீட்டைப்பற்றிக் கூறும் குபார் உண்மையாகிவிட்டதுபோலுமாகும் என்றும் தோன்றியதால் அவருடைய ஆத்திரம் பூராவும் வீட்டைவிற்ற வீட்டுக்காரன்மீதுதான் பாய்ந்தது.

பகவான் சோதனை செய்யவேண்டும் என்று ஆரம்பித்தால் செவ்வையாகச் சோதிப்பதுதானே அவருடைய திருவிளையாடல். அதேபோல் இவருக்கு உடம்பு சற்று குணமாகியதும் இதேபோல் சந்திராவுக்கு பலமான ஜுரம் வந்துவிட்டதுகண்டு, சற்றும் அசையாதிருந்த அமிருதவல்லியம்மாளின் மனமும் அசைந்து கொடுத்து பயத்திற்குச் சிறிது அடிமையாகியதென்றல் மற்றவர்களின் கலக்கத்தைக் கேட்கவேண்டுமா ?

"பாழும் பணத்தாசை பிடித்து இவ்வீட்டை எனக்கு விற்ற அந்த மகாபாவி நன்ருக இருப்பான! அவன் குடி விளங்குமா! அவன் வம்சம் கிளைக்குமா! ஏமாற்றிச் செய்துள்ள த்ரோகம் அவனை ஆட்டி ஹதம் செய்துவிடுமல்லவா! என் மனதும் வயிறும்

கொதிப்பதுபோல் அவன் செத்துப் பாழாகவேண்டும்'' என்று நரஸிம்மன் வீட்டுக்காரனை சந்திராவின் காது கேட்க வைவதை அவளால் சகிக்கவேமுடியவில்லை. ''என்னுருயிர் ஸ்ரீகரனைத்தானே இந்த வசைதாங்கும். ஐயோ! எனக்கும் என் இப்பாழும் ஜுரம் வரவேண்டும்? என் அன்பருக்கு அனுவசியமான வசையை மகாபாவி நான் வாங்கி வைக்கிறேனே! வீட்டை விற்று அவர் படும் சங்கடம் போதாமல் இப்படியும் ஒரு வசை வேண்டுமா? என்னால் அவருக்குக் கிடைக்கும் சன்மானமா இது?

என் அன்பருக்கு ஒருவிதமான ஆபத்தும் வராது காப்பாற்று. என்னப்பனே! ரக்ஷகா! இவ்வசை இப்படியே காற்றில் கலந்துவிட வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்கிறாள். தகப்பனுருக்கு உண்மையைச் சொல்வதற்கும் முடியவில்லை. எனினும் ''அப்பா! வீணாக வீட்டுக்காரர்களை வைவானேன்? இனி வீட்டுக்காரர்கள் நாம்தானாகையால் நீங்கள் எது சொல்லியபோதிலும் நம்மைத்தான் சாரும். ஆகையால் நீங்கள் பேசாமலிருங்கள். பகவான் இங்கேயே இருந்து நம்மைக் காக்கும்போது நமக்கென்ன குறைவு? மனிதர் என்றால் ஜுரம் வராதா! நோய்களை அனுபவிக்க மனிதனும் மனிதனை உபத்திரவிக்க நோய்களும் கடவுளால் உண்டாக்கப்பட்டிருக்கையில் இதை விலக்க நம்மால் முடியுமா? இதற்கு வீடென்ன செய்யும்? ஜுரம் நாளைக்குத் தெளிந்துவிடும். வீட்டைப்பற்றி வைவது அப்படியே நிலைத்துப்போகாதா! எனக்கு மனப்பூர்ணமான நம்பிக்கை இவ்வீட்டிலிருக்கிறதேயன்றி அவநம்பிக்கையோ, அபாயமோ ஒரு சிறிதும் தோன்றவே இல்லை. ஆகையால் நீங்கள் பயப்படவேண்டாம். இவ்வீட்டையும் கோயிலையும் விட்டு நாம் போகவேகூடாது'' என்று சட்டம் போட்டதுபோல் திட்டமாகக் கூறினாள்.

இந்த ரகஸியம் எப்படியோ சந்திராவுக்குத் தெரிந்துவிட்டதே என்கிற பயத்தினால் தம்பதிகள் இடிந்துபோனார்கள். நரஸிம்மனும் பதில் பேசாது மௌனம் சாதித்தார். சந்திராவின் மனத்தில் மட்டும் அமைதி என்பதே மறைந்தது.

## 12

உலகத்தில் எப்போதுமே சந்தோஷம் வந்தாலும் மேலே மேலே வருவதும், துக்கம் வந்தாலும் மேலே மேலே வருவதும் பயப்படத்தக்க ஆதசங்களும் அப்படியே தோன்றி ஆளை நிலைகுலைச் செய்துவிடுவதும் இயற்கையின் ஒருகூற்று. அதேபோல் நரஸிம்மம் பயந்ததற்கு ஏற்றாப்போல்தானும் படுத்து, சந்திராவும் படுத்துவிட்டதானது பெரிய வேதனையாகவிருந்தது.

சந்திராவுக்கும் ஒரு வாரத்தில் நன்றாகக் குணம் உண்டாகியது. நரஸிம்மனுக்குமட்டும் குணமாகியும்கூட முகத்தில் உண்டாகிய பயந்த களை மாறவேயில்லை. புதிய பங்களாவில் புதிய நினுசாகவே காணப்பட்டார். முதலியாரும் மற்றொருவரும் நரஸிம்மத்தை உடல் நலம் விசாரிக்க வந்து, மீண்டும் கிளறிவிட்டுச் சென்றதில் 'நரஸிம்மத்தின் மூளை கலங்கிவிடுமோ!'' என்றுகூட அமிருதவல்லிக்குப் பயம் உண்டாகியது.

ஒருமாதம் லீவு வாங்கிக்கொண்டுவந்த சேகருக்கு இன்னும் 15 நாட்கள் லீவு பாக்கியிருந்தது. சந்திராவின் தேக அசுகத்தின் போது அவளுக்கு சில சமயம் மருந்து கொடுக்கவும் கஞ்சி கொடுக்கவும் சகஜபாவத்துடன் சேகர் செய்ததெல்லாம் இந்திராவின் இதயத்தில் பெருந் தீயாக மூண்டு அவள் நிலையைக் குலைத்துவிட்டது.

சந்திராவுக்கு உடம்பு நன்றாகக் குணமாகியபிறகு அவள் தன் ரூமில் சோபாவில் படுத்துக்கொண்டிருந்த சமயம் வேலைக்காரி ஒரு கடிதத்தைச் சந்திராவிடம் கொடுத்துச் சென்றாள். முதலில், "இது ஸ்ரீதரனுடையதாக இருக்குமா!'' என்று ஆவலுடன் பார்த்தாள். தபால் முத்திரை இல்லை. கவர்மீது விலாசமும் இல்லை. இப்படி ஒரு கவர் யார் கொடுத்திருப்பார்கள் என்று எண்ணி வியந்தவாறு அதை உடைத்தாள். தன் சகோதரியின் கையெழுத்து என்பதை அறிந்தவுடனே அவளுக்குண்டாகிய வியப்பும் உணர்ச்சியும் தாங்கவே முடியவில்லை. அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

"சந்திராவுக்கு! இக்கடிதத்தைப்பார்த்ததும் உனக்கு அதிர்ச்சியாகவோ, நூதனமாகவோ தோன்றலாம். ஆம்...தோன்றுவது சகஜமேயாகும். தோட்டத்திற்குப் பழுது வரக்கூடாதென்று காவல் போடுவதுபோல் முள்வேலிகளைப் போடுகிறார்கள். அம் முள்வேலியே காலில் குத்தி காலையும் பாழாக்கித் தோட்டத்தையும் கெடுத்துவிடுவதென்றால் வேலியை எடுத்தெறியவேண்டியதுதானே. அதன் அர்த்தம் உனக்கு விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன். வெளிச்சத்திற்காக ஏற்றும் விளக்கை வீட்டைப் பற்றவைக்கச் சம்மதிப்பார்களா!...என் பெற்றோர்கள் திக்கற்ற அனாதையான உன்னை அவர்களுடைய வாத்ஸல்யத்தினாலும், உன் தந்தையின் மரணத்தருவாயில் கொடுத்த வாக்குதத்தத்தினாலும் இது பரியந்தம் என்னைவிட அதிக செல்வாக்குடனும் பரிவுடனும் வளர்த்து வருகிறார்கள்.

"எனக்கென்ன குறைவு ஏராளமான பணமிருக்கிறது'' என்று நீ நினைக்கலாம். பணத்தையும் வைத்துக் காப்பாற்றி நன்றாக உபயோகப்படுத்தினால்தான் பலனுண்டு. பணத்தை சில சோதாக்களைப்போல் என் பிதா எடுத்துக்கொள்ளாது உனக்கு நன்றாகச் சேர்த்திருப்பதால்தான் பணம் நின்றிருக்கிறது அவர்கள் உனக்குச் செய்துள்ள நன்மைக்குப் பதில் நீ அவர்களுடைய ஏக புதல்வியின் வாழ்க்கையில் மண்ணைப்

போடவும் அவளை அதோகதியாக்கவும் உன்னிடம் வாத்ஸல்யத்தைக் காட்டிய ஆத்மாக்களுக்கு வயிற்றெரிச்சலையும் அவமானத்தையும் உண்டாக்கவும் நீ முற்பட்டிருப்பது மிகவும் வெறுக்கத்தக்கது என்பதை நீ அறியவில்லை.

சந்திரா! நீ சிறு குழந்தையல்ல. உன் அத்திம்பேரிடம் நீ நடந்துகொள்ளும்மாதிரி அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அவர்கள் சொல்லமுடியாது தவிக்கிறார்கள். இங்கு லீவு எடுத்துக்கொண்டு என் கணவர் வந்தது உன் வலையில் விழுவதற்குத்தான்போலும். அவர் இனி உன்னையும் இவ்வீட்டையும் விட்டுப் போகக்கூடமாட்டார் என்று தோன்றுகிறது. நீயாக இதைத் தெரிந்துகொள்வாய் என்று நானும் பெற்றோர்களும் எதிர்பார்த்தோம்.

உன்னை இது பரியந்தம் காப்பாற்றியாயிற்று. நல்ல இடமாகப்பார்த்து ஸாரநாதனுக்கு விவாகத்தைச் செய்துகொடுத்து அவனிடம் சகலத்தையும் ஒப்புவித்துவிடவேண்டுமென்று என் பெற்றோர்கள் தீர்மானித்திருக்கையில் ஸாரநாதன் எதிரிலேயே, நீ உயர்ந்த குலத்துப்பெண் என்பதை மறந்து, கேவலம் தாசி, வேசிபோல், சகோதரியின் புருஷனிடமே மோசமாக நடந்துகொண்டதைக் கண்டு அவன் உள்ளம் புழுங்கினான்.

இம்மாதிரி நடப்பதால் உனக்குமட்டும் அவமானமின்றி என் பெற்றோர்களுக்கும் மானம் சிந்திப்போகிறது. ஆண்பிள்ளைகள் படிக்கும் காலேஜில் படிப்பது கொஞ்சங்கூட ஒழுங்காயில்லை. உன் முகத்திற்காக அப்பா சேர்த்திருக்கிறார். அந்த படிப்பின் சகவாஸத்தினால்தான் இப்படி கெட்டுப்போக தைரியம் வந்தது போலும். நீ இனி மானவதியாயிருந்தால்-உன்னைக்காப்பாற்றியவர்களுக்கு நீ பிரதி த்ரோகம் செய்யாது அவர்களை கவுரவிக்கின்றவளாயிருந்தால்-இனி இந்த நிமிடம்முதல் உன் அத்திம்பேருடன் பேசாதே. அவர் கேட்டால்கூடப் பதில் சொல்லாதே. அப்பா அம்மாவின் மனத்தை நோகச் செய்யாதே. உன்னுடைய நன்மைக்கே இதை நான் இத்தனை பெரிதாகவும் விரிவாகவும் எழுதுகிறேன். இக் கடிதம் நான் எழுதியது வீட்டில் என்னைத்தவிர வேறு யாருக்குமே தெரியாதாகையால் யாரிடமும் சொல்லாதே. எழுதியதேதெரியக்கூடாது.பத்திரம்.

இங்ஙனம்,

இந்திரா."

ஐயோ, பாவம்! இந்த கடிதத்தைப் படித்ததும் அப்பேதைப் பெண்ணின் உள்ளம் எப்படித்தானிருக்கும்! ஸ்ரீதரனின் கடிதத்தைப் படித்து அடைந்த துன்பத்தைவிடப் பதினாயிரம் பங்கு அதிகரித்த சங்கடமும் அதிர்ச்சியும், இதயப் புண்ணும் உண்டாகியது. "என்ன! இது கனவா! நினைவா!...உண்மையான கடிதமா!...

என்னுருயிர் சோதரி இந்திரா எழுதிய கடிதமா!...இதுவா இந்திரா எழுதியது! ஆம்...சந்தேகமில்லாமல் இந்திராவின் கடிதந்தான். ஐயோ! என் பாபமா இந்திராவுக்கு இத்தகைய மாறுபாடுகள் மனத்தில் உதயமாகியிருக்கின்றன என்னருமைப்பெற்றோர்கள்கூடவா இப்படி நினைத்து என்மீது சினங்கொண்டிருக்கிருர்கள். இது உண்மையானதா! என்னுடைய சோதனைக்காலத்தின் விபரீத சம்பவமா இது! ஐயோ! என்ன செய்வேன்? என் குலதெய்வத்தின்மீது ஆணையாக நான் எனது மனத்தினுல்கூட என் சகோதரிக்குத் தீங்கு நினைக்கவில்லையே. என்னுயிர் போகும் கஷ்டத்திற்கு நான் உள்ளாகியபோதிலும் என் பெற்ருேரின் மனத்தை நான் நோகச் செய்ய மாட்டேனே! என்னுடன் இத்தனை வருஷங்களாகப் பழகியும் இந்திரா என்னைப்பற்றி அறிந்தது இவ்வளவுதானு!" என்று நினைத்து நெருப்பின்மீது புழுவெனத் துடிக்கிருள். அவளுடைய இதயம் அப்படியே வெடித்துவிடும்போலாகிவிட்டது. மயக்கத்தால் அவள் தேகம் சாய்ந்தது.

## 13

அன்று அதிகாலையில் குடுகுடுப்பைக்காரன் பங்களாவின் வாசலில் நின்றுகொண்டு, "குடுகுடுகுடுகுடுகுடு நல்லகாலம் பிறக்குது. இன்னிக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் கடிதாசிலே வருது. ஐயாவுக்கு பெரிய உத்யோகம் வருது. பலமான உத்யோகம் வருது" என்று தன் வயிற்றுப்பிழைப்பின் காரணமாகக்கூறினுன்.

"காக்காய் ஏறியது பனம் பழம் விழுந்தது" என்பதுபோல் அன்று நரஸிம்மன் ஆபீஸுக்குச் சென்று திரும்பி வரும்போது வெகு சந்தோஷத்துடன் வந்து, "அமிருதா! எனக்கு திடீரென்று உயர்ந்த வேலை கிடைத்ததோடு சம்பளமும் உயர்ந்தது. நான் இந்த பதவி எனக்கு வரும் என்று நினைக்கவே இல்லை. இதற்காக உள்ள பரீக்ஷைக்கு நான் போகவில்லையாதலால் வேறு ஒருவனுக்குத்தான் கிடைக்குமென்று நினைத்தேன். எல்லோரும் பிரமிக்கும்படி எனக்குக் கிடைத்திருக்கிறது" என்று சந்தோஷத்துடன் கூறினர்.

அமிரு:—பார்த்தீர்களா! வீடு வாங்கிய வேளை நல்ல வேளை. வீட்டின் ராசி நல்லது. அதன் அதிர்ஷ்டந்தான் இம்மாதிரி நீங்கள் நினைக்காத காரியம் நடந்திருக்கிறது. உண்மையில் வீட்டில் கோளாறுகள் இருக்குமாயின் இத்தகைய நன்மைகள்உண்டாகுமா! இந்த ஒரு நல்ல காரியத்திலிருந்தாவது நீங்கள் மனது தேறி தெளிவு பெறுங்கள். வீண் கலவரத்திற்கு மனத்தில் இடங்கொடுத்

திருப்பதால்தான் உங்கள் முகக் களையே மாறி ஏதோ மாதிரி இருக்கிறது. மனத்தில் தைரியலக்ஷ்மியின் துணை வேண்டாமா! அதைக் கைவிட்டதனால்தான் கவலையின் காரணமாக ஜுரம் வந்தது. சந்திராவுக்கு அலைச்சலால் ஜுரம் வந்தது. கிலி ஆளையேகூடக் கொன்றுவிடும். இதோடு அவைகளை விட்டுவிடுங்கள். வீட்டைப் பற்றி பயமே மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டாம். வாருங்கள் கோயிலுக்குப் போய் பஜனை செய்யலாம்'' என்றாள்.

தனக்கு உத்யோகம் உயர்ந்ததைப்பற்றி ஒருபுறம் அபாரமான சந்தோஷம் பொங்கியபோதிலும் மனத்தில் ஆழமாய் பதிந்துபோன கிலி மட்டும் போகவே இல்லை. தேறுதல் கூறும்போது சற்று தைரியமாயிருப்பதுபோல் தோன்றும். அடுத்த நிமிடமே மறுபடியும் பயம் தலைதூக்கி நிற்கும். இந்த நிமிடம் அமிருதவல்லியம்மாளின் தைரிய மொழியால் கடுகளவு தைரியங்கொண்டவர் "சரி! குழந்தை சந்திரா என்ன செய்கிறாள். அவளையும் அழைத்துக் கொண்டு போகலாம்'' என்றார்.

படித்த கடிதத்தை ஒளித்துவைக்கக்கூட முடியாது மனம் சுக்கல் ஆயிரமாக வெடித்ததுபோல் மயக்கத்தில் படுத்திருந்த சமயம் "குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுவென்னும்'' என்ற பழமொழிக் கொப்ப இந்திரா கடிதத்தை அனுப்புவதற்கு முன்பு கண்ணுமண்ணு தெரியாதஆத்திரத்தில் கடிதத்தைஎழுதி அவ்வேகத்தில் அனுப்பினாள்.

அனுப்பிய அடுத்த க்ஷணமே அவளறியாதவாறு ஏதோ மனத்தில் சித்திரவதை செய்கிறது. இன்னதென்று யூகிக்கமுடியாதபடி தத்தளிக்கிறாள். "ஐயோ! அவளிடம் நேரில் வாய் வார்த்தையாகச் சொல்லாமல் கடிதத்தில் ஏதேதோ எழுதிவிட்டோமே! அதில் அப்பா அம்மாவுக்குச் சம்மந்தமில்லாத—தெரியாத—விஷயங்களையெல்லாம் அவர்கள் பேசுவதுபோலவே எழுதிவிட்டோமே! சந்திரா என்றால் அவர்களுக்கு ஒரு படிக்கட்டு அதிகமான வாத்ஸல்யமாயிற்றே! அந்த சலுகையால் ஒரு கால் சந்திராவே நேரில் அக்கடிதத்தை அவர்களிடம் காட்டிவிடுவாளோ! அதனால் விபரீதம் ஏதாவது நேருமோ...ஒருவேளை என்கணவரிடமே அக்கடிதத்தைக் காட்டி என்மீது பழி தீர்க்க எண்ணுவாளே! அதனால் போராபத்து விளைந்துவிடுமோ! இதற்கு என்ன செய்வது!'' என்கிற புதிய கலக்கமும் அபாரமான திகிலும் ஒருங்கே உண்டாகியதால் ஆயிரம் வாள் கொண்டறுப்பதுபோல் சித்திரவதை செய்கிறது.

சந்திராவின் ரூம் இரண்டாவது மாடியிலிருக்கிறது இந்திராவின் விடுதி முதல் மாடியிலேயேஇருக்கிறது."வழக்கம்போல் சந்திராவை விசாரிக்க எங்கே மாடிக்குத் தன் கணவனோ அல்லது தாயாரோ போய்விடுவார்களோ! கடிதத்தைப்பார்த்துவிடுவார்களோ!'' என்கிற மனக்கவலையால் இரண்டாவது மாடிப்பக்கம் எட்டி எட்டிப்பார்க்கிறாள். கையைப்பிசைகிறாள். முகத்தில் கவலையும், அசட்டுக்களையும்

தாண்டவமாடுகிறது. தன் கணவன் வெளியே போயிருப்பவன் வந்துவிட்டால் நேரேஎங்கு சந்திராவின் ரூமுக்குப் போய்விடுவானோ என்கிற பயத்தால் செய்வதறியாது நின்றிருந்த சமயம் சேகரன் வந்துவிட்டான். அவனைப் பார்த்த பிறகுதான் இன்னும் அதிகரித்த கலவரமும் பயமும் உண்டாகியது. அசட்டுச் சிரிப்பு சிரித்து பல்லை இளித்தபடியே கணவன் மாடிப்படி ஏறவிடாமல் குறுக்கே மறைத்துக்கொண்டு, "நேரமாகும் என்று கூறினீர்களே இதற்குள்ளாக வந்துவிட்டீர்களே!" என்று ஏதோ ஒருவார்த்தை பேசவேண்டும் என்கிற வேகத்தில் கேட்டாள்.

சேகர்:—இதென்ன புதியகேள்வி இந்திரா! நான் சீக்கிரம் வந்தது உனக்கு கோபமாஎன்ன? வழியிலேயே மறித்துக்கொண்டு கேட்கிறாயே! சந்திரா காலேஜிலிருந்து வந்துவிட்டாளா! உடம்பு ஒன்றுமில்லையே!—என்று நிஷ்களங்கமான இதயத்துடன் கேட்டது, எரிகிற அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோல் இந்திராவின் மனத்தீயைக் கிளறியது. முகத்தையொருவாறு சுளித்துக்கொண்டு "ஆமாம்! மைத்துனிக்குப் பரிவதில் ஒரு குறைவுமில்லை. உள்ளே வாருங்கள், காப்பி ஆறிப்போகிறது" என்று கையைப்பிடித்து இழுத்தாள். மனைவியின் அன்புக்கு அடிமையான எவரும் அதற்கு அடங்கிப்போவது சகஜந்தானே! சேகர் இந்திராவின்மீது தன்னுயிரையே வைத்து இதய பூர்வமாக நேசிப்பதை ஆத்திர புத்தியும் பொறாமைக் குணமும் நிறைந்துள்ள அவள் எப்படி அறிவாள்? அவன் இந்திராவுடன் உள்ளே போனான்.

அடுத்த நிமிஷமே அமிருதவல்லியம்மாள் மாடிப்படி ஏறுவதைக்கண்ட இந்திராவின் நெஞ்சு துணுக்குற்றது. சந்திரா கடிதத்துடன் ஒருவேளை அழுதுகொண்டோ, அல்லது ஆத்திரமடைந்துகொண்டோ இருப்பாள். அதைத் தன் தாயார் பார்த்துவிடப் போகிறாளே! காரியம் விபரீதமாக முடியுமே! என்று நடுநடுங்கியவாறு "இதோ வந்துவிட்டேன்" என்று கணவனை உட்காரச் செய்துவிட்டு ஓட்டமாக மாடிப் பக்கம் வந்து "அம்மா! அம்மா! உன்னை அப்பா கூப்பிடுகிறார்!" என்று மேலே ஏறவிடாது வழி மறித்தாள்.

"அப்பா! கூப்பிடுகிறாரா! அப்பாவிடமிருந்துதானே நான் வருகிறேன். கூப்பிட்டால் நீ போய் என்னவென்று கேட்டு வா!" என்று கூறியபடியே மாடிப் படிகளில் ஏறினாள். பொய் சொல்லியும் பலனில்லாது போனதால் ஓட்டமாகத் தான் முதலில் மாடிக்குப்போய் சந்திராவின் அறையில் எட்டிப் பார்த்தாள்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! பரதேசிக் குழந்தை தன்னினைவிழந்து மூர்ச்சையாகிக் கிடப்பதையும் அக்கடிதம் மட்டும் கையிலேயே இருப்பதையும் கண்ட இந்திரா முதலில் திடுக்கிட்டாள். எனினும் தனக்கு எங்கே தன் செய்கையே ஆபத்தாக முடியுமோ!

18307

என்கிற பயத்தினுல் நெஞ்சில் பச்சாத்தாபங்கூடத் தோன்ருது கல்லினும் கடினமான உறுதியும் அழுத்தமும் உண்டாகியதால் சந்திராவின் கையிலிருந்த கடிதத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொள்ள நினைக்கும்போது இந்திராவின் கைகள் நடுங்குகின்றன. இதயம் நூறு மைல் வேகத்தில் செல்லும் மோட்டாரைப்போல் வேகமாக அடித்துக்கொள்கிறது. முகத்தில் அசட்டுக்களையும் பயந்த உணர்ச்சியும் தாண்டவமாட அந்த கடிதத்தைத் தொடுகிருள். "எங்கே சந்திரா விழித்துக்கொள்வாளோ" என்று நடுங்கினுள்.

அதே சமயம் அதைப் பார்த்துக்கொண்டு வந்த அமிருதவல்லியம்மாளுக்கு விவரம் புரியாவிடினும் "இந்திரா இத்தனை வேகமாக வந்து எதை சடக்கென்று மடியில் சொருகிக் கொண்டாள்! என்கிற பெரிய சந்தேகம் உண்டாகியது. "இந்திரா! என்ன செய்கிருய்!" என்று சற்று அதட்டலான குரலில் கேட்டாள்.

இந்திராவின் முகத்தில் தாண்டவமாடும் அசட்டுக் களையைப் பார்த்தவாறு "என்ன இந்திரா! உள்ளுக்குக் காவலாக என்னை உட்காரவைத்துவிட்டு இங்கு வந்தாய். என்ன சமாச்சாரம்?" என்று கேட்டுக்கொண்டே சேகரும் அங்கு வருவதைக் கண்ட இந்திராவின் மனத் துடிப்பும் உணர்ச்சியும் எப்படித்தானிருக்கும்? இன்னது பேசுவது, செய்வது என்பதை யறியாது தவிக்கிருள். தேகம் பதறுகிறது. கதிகலங்கியது.

## 14

"குழந்தாய்! ஸ்ரீதரா! உனக்கு நான் தகப்பன் என்கிற ஸ்தானத்திலுள்ள சத்ருவேயன்றி ஆப்தனல்ல. என்னுடைய இந்த ஜென்மத்தில் நான் மனஸ்கரித்து எவ்விதமான தீமையும் செய்தறியமாட்டேன். எத்தனை ஜென்மாந்திர பாதகங்களோ, இம்மாதிரி என்னை மட்டு மின்றி வயிற்றில் பிறந்த தோஷத்தினுல் உன்னையும் ஆட்டுகிறது. அந்தப் படுபாவி—அவனை எரிகிற வேளையில்தான் நினைக்கவேண்டும்—என் வியாபாரத்திலும் பிழைப்பிலும் மண்ணைப்போடாதிருந்தால் நம் கதி இப்படி ஊர் சிரிக்கும்படி ஆயிருக்குமா! எனக்கு ஏதோ இன்னமும் சந்தேகமாகவே இருக்கிறது. இதோ பாரு. பங்களாவை வாங்கிய மனிதர் கடிதம் எழுதியிருக்கிருர். இதுவும் என் கிரகசாரந்தானே!" என்று கூறுவதைக் கேட்ட ஸ்ரீதரனின் உள்ளம் துடித்தது. "என்ன! பங்களா வாங்கியவர் கடிதம் எழுதியிருக்கிருரா! எதற்கு, என்ன கடிதம்?" என்று ஆவலுடன் கேட்டவாறு அதை வாங்கிப் படிக்கவாரம்பித்தான்.

"பேராசைப் பிடித்த பெரிய மனிதரே!

உம்முடைய யோக்யதையை இவ்வுலகம் ஏற்கெனவே அறிந்திருந்தும் நான் அறியாதுபோனது என் முட்டாள் தனமேயாகும். பூதமும் பைசாசமும் காத்துக் கிடக்கும் வீட்டைக் கிளிக்கொஞ்சும் அரண்மனை என்றும் லக்ஷ்மீகரம் நிரம்பிய நிலயமென்றும் பொய்யும் பித்தலாட்டமும் கூறி என்னை ஏமாற்றி வாங்கிய பணம் உமக்குத் தக்குமா! கொலை யும் தற்கொலையும் நடந்துள்ள இந்தப் பாழும் வீட்டை என் தலையில் கட்டி என் குடும்பத்தைச் சிதறவடிக்கத் துணிந்த தால் நீர் என்ன வாழப்போகிறீர்? உமது மக்கள் மனைவி இதனல் நாசமாகி விடமாட்டார்களா! ஊழலை மறைத்துப் பிறர் வயிறெரியச் செய்வதால் நீர் அடையப்போகும் லாப மென்ன? இதேவீட்டில் உமது முதல் மனைவி பயித்தியம் பிடித் துத் தற்கொலை புரிந்துகொண்டு செத்தாளாமே. பைத்தியம் பிடிக்கும் பூதமோ, ஏவலோ, சூன்யமோ, சாபமோ இவ்வீட் டிலிருப்பதனுல்தானே நீர் இத்தகைய கோட்டையை கேவலம் 15 ஆயிரம் ரூபாயிக்கு விற்றீர். இந்தப் பாழும் வீட்டை வாங்கின நாள் முதல் நாங்கள் எமனேடு மன்றுடும் புதிய சுகத் தைத்தான் காண்கிறேம். நித்ய கண்டம் பூர்ணயிசாக எங்கள் வாழ்நாள் கழிகிறதைக் காண உமக்கு சந்தோஷமா! என் னுருயிர் கண்மணி சந்திராவுக்கு இந்த இழவு வீட்டிற்கு வந்த நாள்முதல் உடம்பு சரியில்லாது உமது மனைவியை பாதித்த சித் தப்பிரமை அவளுக்கும் வந்துவிட்டதோ என்கிற அபாரமான திகிலை அடைந்திருக்கிறேம். என் குழந்தை சரியாகச் சாப் பிட்டும், அவளது சுவபாவீகமாயுள்ள கலகலப்பான சிரிப்பும் சந்தோஷமும் கொண்டு பேசியும் எத்தனையோ நாளாகி விட்டன. அவளை ஹானர்ஸ் பி. எ. படிக்கவைப்பதாக நான் செய்துகொடுத்த வாக்குதத்தத்தின்படி நடக்கவிடாமல் காலேஜை தானே விட்டுவிட்ட ரகஸியத்தையும் இப்போதே அறிந்தேன். என் குடும்பத்தை நாசமாக்கி என் வயிறெரியச் செய்யும் உமது குடும்பம் நிர்மூலமாகிவிடுவதற்கு அதிக நேர மாகாது. கடவுள் ஒருவன் எல்லோரையும் பார்த்துக்கொள்ள இருக்கிறன் என்பதை மறக்கவேண்டாம்.

இங்ஙனம்,
நரஸிம்மன்."

இதைப் படித்தவுடனே ஸ்ரீதரனுடைய உள்ளம் சுக்கல் நாருக உடைந்து சிதறியதுபோல் தோன்றியது. தன் தாயின் அலங் கோலத்தை அவன் பார்த்திருக்கும் பயங்கரம் இன்னும் அவன் மனத்தைவிட்டு மாறவில்லை. தன்னுயிரினும் இனிய சந்திராவுக்கும் ஆபத்தான நிலைமை வருவதென்றுல் அதை அவன் எவ்விதந்தான் சகிக்கமுடியும்?

'அவளுடைய அந்தஸ்தும் நிலைமையும் தெரியாமல் பிரேமையைப் பிரவாகம்போல் வளர இடங்கொடுத்துவிட்ட சங்கடம் இப்போது தான் தெரிகிறது. அதிலும் இந்தக் கட்டிடம் மத்தியில் வந்து இத்தகைய த்வேஷத் தீயை மூட்டிவிட்டதே!...என்ன செய்வது? வீட்டில் என்ன குற்றமிருக்கிறது. வீடு என்ன செய்யும்? எத்தகையபேயுமில்லை. பிசாசுமில்லையே. என் தாயின் கர்மத்தினுல் அவள் கதி அப்படியாகியது. சந்திராவுக்குமா விபரீத நிலைமை உண்டாகவேண்டும்? ஐயோ! நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறதே. வேண்டுமென்று யாரோ விரோதிகள்தான் அந்தவீட்டைப்பற்றி இத்தகையகோளாறுகளைக் கட்டிவிட்டு அவர்களைக் கலக்கியிருக்கிருர்கள். இதில் சந்தேகமே இல்லை.

அப்பா!...நம் விரோதிகள் நம்முடைய நலிவைக்கண்டு சந்தோஷப்படுவதோடு நில்லாது எத்தனை தூரம் வேலை செய்திருக்கிருர்கள் பார்த்தீர்களா! இல்லாவிட்டால் பங்களாவை வாங்கியவர்களுக்கு நம்முடைய குடும்ப விஷயங்கள் தெரியவேண்டிய பிரமேயமே இல்லையே...வீணை புகார் செய்திருப்பதைக் கேட்டு பயத்தினுலேயே, கிலியினுலேயே இம்மாதிரி அவர்களுக்கு தேகசுகம் கெட்டிருக்கவேண்டும். இதற்கு நாம் என்ன செய்வதப்பா!... இதற்குப் பதில் எழுதப்போகிறீர்களா?' என்று கேட்டான்.

ஏதோ எந்திரம்போல் கேட்கிருனேயன்றி வயிற்றில் குமுறும் சங்கடத்தைச் சொல்லத்திறமில்லை. "அழைப்புக் கடிதத்தை அபாரமான சந்தோஷத்துடன் கொடுத்த அன்று சந்திராவின் சந்திரவதனத்தைக் கண்டபிறகு பார்ப்பதற்கும் பாக்யமற்றுவிட்டதை எண்ணி ஏற்கெனவே வெதும்பிக்கொண்டிருக்கும் எனக்கு இச்செய்தி பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டதே. ஐயோ!...என் சந்திராவை ஒருமுறை பார்க்கும் பாக்கியம் கிடைக்குமா! சத்தியமாக இதெல்லாம் வெறும் பொய் வதந்தி; இவைகளை நம்பவேண்டாம் என்று கூறித் தேற்றிவந்தால் என் மனது அடங்கும் போலிருக்கிறதே! என் கண்மணி அன்று கூறியதுபோல் இருவர் இதயம் மட்டும் இந்த நிகரிலாப் பிரேமைக்கு அடிமையாகியதேயன்றி அதைப் பிறரிடம் கூறவும் சமயமில்லாதுபோயிற்றே... என்ன செய்வேன்? சந்திராவா சாப்பிடுவதில்லை? பேசுவதில்லை? சிரிப்பதில்லை? சந்தோஷமாயிருப்பதில்லை?...அவளைப் பார்க்காது நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறதே!" என்று தத்தளிக்கின்ருன்.

"ஸ்ரீதரா! என்ன வெகு ஆழ்ந்த யோசனை செய்கிருய்? கண்ணீர்வழிகிறதே. விஷயமென்ன? என்மீது வருத்தப்பட்டு மனம் நோகிருயா?"....என்று கேட்கும்போது அவர் கண்ணில் நீர் தளும்பியது.

ஸ்ரீத:—அப்பா! உங்கள்மீது என்ன குற்றம்? உங்களை நோவதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் கால தேவதையின் ஆட்சித்

தாண்டவம், இதை என்னுள்ளமறியவில்லையா! என் தாயின் பரிபவத்தை நினைத்தேன். கண்ணீர் வந்தது. வேறொன்றுமில்லை. நம் குடும்பம் சிதறி சின்னாபின்னமாகியதற்கு ஒரே ஒரு கையெழுத்துத் தானே மூலகாரணமாக நின்றது. அந்த எழுத்து தானே பாணம்போல் நம்மைத் தாக்கி அதோகதியாக்கிவிட்டது. கூட்டு வியாபாரத்தின் பலனும் கூட்டுக் கையெழுத்தின் பலனும் கூட்டு பாங்கி வைத்து அடைந்த லாபமும் ஏழு தலைமுறைக்கும் போதுமல்லவா...இந்தப் பாதாளத்திலிருந்து நாம் எப்போது மீளுவோம் என்று நினைக்கும்போது அப்படியே இதயம் துடிக்கின்றது. தலை சுழலுகிறது. இன்னும் எவ்வளவு கடன் பாக்கியிருக்கிறது?

தகப்:—பங்களாவுடன் சகலமும் முடிந்துவிடும் என்று பார்த்தேன். அதை விலை ஓங்காமல் தடுக்கவும் சத்ருக்கள் முன்வந்ததால் இன்னும் வட்டியுடன் ஏழாயிரத்துச்சில்லரை பாக்கியிருக்கிறது. அதை எந்தவிதமாகக் கொடுக்கப்போகிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. நாம் வெளியூருக்குப் பிழைப்புக்காகப் போவோம் என்றாலும் கடனுக்காக பயந்துகொண்டு ஓடியதாக நினைப்பார்கள். அந்த தர்மசங்கடத்தினால் போகவும் முடியவில்லை. கடனுக்கு என்ன செய்வதென்றே தெரியாது குழம்பும்போது தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூடத் தோன்றுகிறது.

ஸ்ரீதரன் நடுநடுங்கினான். "அப்பா! பட்டதுன்பமெல்லாம் போதாமல் இதுவும் ஒன்று பாக்கியிருக்கிறதா! இம் முறையிலும் நான் சோதனைக்குள்ளாகவேண்டுமென்று விரும்புகிறீர்களா! வேண்டாம்; அம்மாதிரி அனியாய மரணத்தில் பிரவேசிக்கவேண்டாம். கடன்காரர்களின் காலில் விழுந்து நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்...என்னை சோதனைக்குள்ளாக்காமலிருங்கள்...என்று கண்ணீர்விட்டாள்.

தகப்:—ஸ்ரீதரா! உன்னை நான் பெற்று வளர்த்து உன் எதிர்காலத்தை எண்ணி மனக்கோட்டை கட்டி இன்புற்றதை அக்கடவுளறிவானேயன்றி பிறர் அறியமுடியாது. என் கோட்டை முற்றும் உன் தாயுடன் மறைந்தது. இச் சிறு வயதில் நீ எத்தனை அல்லல்படவேண்டுமோ பட்டாயிற்று. எனக்கு இனி கடனைத் திருப்பித் தருவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது எனது இன்ஷ்யூரன்ஸ் இன்கம் ஒன்றுதானிருக்கிறது. அது எனது மரணத்திற்குப் பிறகுதான் வரும். கடனுக்கும் அதற்கும் ஒருவாறு சரிக்கட்டிவிடலாம். என் முடிவு சமீபித்துவிட்டால் அந்த பணம் உனக்கு வந்ததும் நீ கடனை ஒழித்துவிடலாம். இதைத் தவிர வேறு எனக்கொன்றுமே தோன்றாததால் நான் இருப்பதை உடைத்துச் சொல்கிறேன். இந்த கட்டை இருந்து என்ன லாபம்? இனி இந்தக் கிழட்டுப்பிணத்தால் நீ அடையப்போகும் நன்மை என்ன இருக்கிறது—என்று தனது மரணத்தின்மீது ஆசையுடன் கூறுவதைக் கேட்ட ஸ்ரீதரனின் உள்ளம்கொதித்தது. தகப்பனார் சொல்வது

போல் அவருடன் தானும் சேர்ந்து இறந்துவிட்டால்தான் என்ன. மனிதத்தன்மையற்று, பொறுமையும், வஞ்சகமும், சூதும் கபடமும் நிறைந்த இவ்வுலகத்தில் நிராசைப் பதுமைகளாக வாழ்வதைவிட காலனுக் கடன்கூட இல்லை; யோக்யமாகக் கொடுத்துவிட்டான். கூட்டுக் கையெழுத்தினுல் அநாவசியமான நஷ்டத்திற்காளாகிய குடும்பமே சிதறிவிட்டது பாவம்!" என்று உலகத்தில் நியாயம் தெரிந்தவர்கள் யாராவது பாராட்டிப் பேசட்டுமே....இருவரும் இருந்துதான் யாரைக் காப்பாற்றவேண்டும்? என்ற ஓர் தீவிரமான வைராக்கியம் மனத்தில் சடக்கென்று எப்படியோ பாய்ந்து மூடிக் கொண்டது. இதுகாறும் மனத்தில் கொஞ்சநஞ்சமிருந்த பாசத்தை அடியோடு களைந்து நெஞ்சைக் கல்லாகச் செய்துவிட்டது.

அதே வேகத்தால், "அப்பா! இருங்கள். இதோ வருகிறேன்" என்று கூறியவாறு சடக்கென்று வெளியேபோனுள். இம்மாதிரி ஸ்ரீதான் சென்றதானது அவனுடைய பிதாவின் மனத்தில் அதீத மான யோசனையையும் தாங்கமுடியாத ஆச்சரியத்தையும் கொடுத்து வாட்டியது.

## 15

தர்மசங்கடமான நிலைமையில் தத்தளிக்கும் இந்திராவுக்கு தன் தாயும் கணவனும் சந்திராவின் அருகில் வருவதற்குள் அந்த கடிதத்தை எப்படியாவது தான் எடுத்துக்கொண்டு போய்விடவேண்டுமென்பதே அவளுடைய எண்ணம். மெல்ல சந்திராவின் கைகளைப் பிடிப்பதுபோல் பிடித்துக் கடிதத்தை வெடுக்கென்று பிடுங்கும் போது அதில் பாதி சந்திராவின் கையில் ஒட்டிக்கொண்டு கிழிந்து மிச்சமே இந்திராவின் கைக்கு வந்தது.

அதற்குள் அமிருதவல்லியம்மாள் வாசற்படியருகில் வந்துவிட்டாள். இந்திராவின் பயம் அதிகரித்துப்போனதால் சந்திராவின் கையிலிருந்து மிகுந்த பாதியையும் வெகு பரபரப்புடன் பிடுங்கி இரண்டு துண்டுகளையும், அடிமடியில் கபக்கென்று சொருகிக் கொண்ட சமயம் அமிருதவல்லி உள்ளே வந்தாள்.

இந்திராவின் செய்கை அமிருதவல்லியம்மாளுக்கு விநோதமாயும் புதிதாயும் தோன்றியதால் "என்ன இந்திரா! எதை அவசரமாக மடியில் சொருகிக்கொண்டாய்? இப்படிக் காட்டு" என்று கேட்டவாறு அங்கு பிணம்போல் கிடக்கும் சந்திராவைப் பார்த்ததும் தூக்கிவாரிப்போட்டுத் திடுக்கிட்டபடி, "சந்திரா! சந்திரா!" என்று அலறியவாறு கூப்பிட்டாள்.

பதிலில்லை. "ஒருகால் அசந்து தூங்குகிறளோ!" என்று எண்ணி மெல்லத் தடவிப் பார்த்தாள். வெயர்வை வெள்ளத்தில் மிதப்பதைக் கண்டதும் பரிதாபத்தால் நெஞ்சம் புழுங்கியது. பங்காவைப் போட்டுவிட்டு, "உம். இத்தனை வெயர்வை கொட்டுவது கூடத் தெரியாமல் என்ன தூக்கம்மா தூங்குகிறய்? பொழுது போய்விட்டதே!" என்று கூறியவாறு நிறைந்த வாத்ஸல்யத்தோடு சந்திராவின் முகத்தைத் துடைத்தாள்.

"என்ன சமாச்சாரம் தூக்கமா! மயக்கமா!" என்று சேகர் சற்றுபதட்டத்துடன் கேட்டான். "அதுதான் எனக்கும் தெரியவில்லை. இத்தனை மட்டித்தனமாக சந்திரா ஒருபோதும் தூங்கியதே கிடையாது. எங்காவது ஒரு சிறு ஓசை கேட்டாலும் விழித்துக் கொள்வாள். அதோடு காற்றில்லாமலும் தூங்கமாட்டாள். இந்த சாயரக்ஷைவேளையிலும் தூங்கமாட்டாள். எனக்கும் பயமாகவே இருக்கிறதே."

என்று மிகுந்த குழப்பத்துடன் சந்திராவைத் தடவித்தடவி பார்க்கிறள். உடம்பு அல்லித்தண்டுபோல் சில்லிட்டிருந்தது. எத்தனை தான் மற்ற இதர விஷயங்களில் நம்பிக்கையில்லையெனினும் மனது அவளையறியாது கலங்கிவிட்டது. "கிரகக் கோளாறுதான் இப்படி ஏதாவது ஆட்டுகிறதா! தளராத என் மனங்கூடத் தளர்ந்துவிடும் போல் இருக்கிறதே. கிரகத்திற்குச் சொந்தக்காரி இவள்தானே! அதனல் இவளை வாட்டுகிறதா?" என்று அமிருதவல்லியம்மாளுக்கே ஒரு சிறிது கலக்கம் உண்டாகியது.

இத்தனை பேர்களும் தவிக்கையில் இந்திரா இதுதான் சமயமென்று மெல்ல நழுவிவிட்டாள். அவள் போனதை அவள் தாயாரோ கணவனே கவனிக்கவில்லை. கீழே போய் காப்பி கொண்டு வருவதற்காகப் போனவள்போல் சிறிது நேரத்திற்குள் காப்பியுடன் வந்து, "அம்மா! இதை குடிக்கச்சொல்லம்மா!" என்றாள்.

சில நிமிஷத்திற்கெல்லாம் சந்திரா தானகவே விழித்துக்கொண்டாள். உடனே தன் கடிதம் நினைவுக்கு வந்ததும் கையைப்பார்த்துக் காணுததால் திடுக்கிட்டாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். பெரிய ஏமாற்றமாகிவிட்டதால் அருகிலிருப்போரைக்கூட மறந்து "அந்த... க...டி...த...ம்!"...என்று மெல்லக் குளறிவிட்டாள்.

இந்திராவுக்கு இதயம் துடிக்கின்றது..."சந்திரா!...என்னம்மா...எதை தேடுகிறய்....இத்தனை நேரம் தூங்கினயா! அன்றி மயக்கமாகவிருந்தாயா...கடிதமா...என்ன கடிதம்மா...கண்ணு... இதோ பாரு"...என்று அன்பு ஒழுகக் கேட்டாள்.

பின்னும் சில வினடிகள் சென்றபிறகே சந்திராவுக்கு நன்ருக சுய நினைவு வந்தது. தன்னெதிரில் தன்னை அணைத்தபடியே தன் தாயார்உட்கார்ந்திருப்பதைத்தான் முதலில் பார்த்தாள். சிறு குழந்தையைப்போலும், தாயைக்கண்ட கன்றுக்குட்டியைப்போலும்

ஒருவிதமான ஆவேசத்துடன், "அம்மா!"....என்று அடிவயிற்றிலிருந்துவரும் சப்தத்துடன் கூவியவாறு அமிருதவல்லியைச் சேர்த்துக்கட்டிக்கொண்டு தேகம் குலுங்கக் குலுங்க காரணமின்றி அழுவதைக் கண்ட அமிருதவல்லியம்மாளுக்கு ஒன்றுமே தோன்ருது உள்ளூறப் பயம் பிடித்து ஆட்டுகிறது.

'சந்திரா! சந்திரா! ஏனம்மா இப்படியழுகிருய்? கண்ணு! இதோ பாரு. என் ராஜாத்தி! என்னம்மா உடம்பு" என்று இதயத்திலிருந்து பீறிக்கொண்டுவரும் வாத்ஸல்யத்தோடு அவளைக் கட்டியணைந்தவாறு கேட்டாள்.

இந்திராவின் நாடி விழுந்துவிடும்போல் துடிக்கிறது. தேகமாத்யந்தமும் குபீரென்று ஆவி கிளம்பி வருத்துகிறது, தான் ஆத்திரப்பட்டுச் செய்த காரியத்தின் ரகஸியம் வெளியாகாதிருப்பதற்குக் கடவுளை வேண்டுவதா! தன் மனதில் உதித்துள்ள சந்தேகமும் கள்ள எண்ணமும் பலியாதிருப்பதற்கு வேண்டுவதா!

சந்திராவின் முகத்தைப் பார்க்கக் கூசுகிறது. அவளையறியாது ஒருவிதமான லஜ்ஜையுடன் உணர்ச்சி பாதிக்கின்றது. தன் தாயாரிடம் அவளுக்குள்ள தனித்த சலுகையில் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவாள் என்கிற பெருந்திகில் அவளைக் கொன்று வாட்டுகிறது. திருடனுக்குத் தேள் கொட்டியது போன்ற நிலைமையை இந்திரா தத்ரூபமாக அனுபவிக்கிருள்.

சந்திரா சிறு குழந்தையைப்போல் விம்முவதைக்கண்டு உண்மையில் சேகரனும் அமிருதவல்லியும் நடுநடுங்கிவிட்டார்கள். சந்திராவுக்கு நன்ருகத் தெளிவு கண்டு தாயைக் கட்டிக்கொண்டு கதறும்போதும் கடிதத்தின் நினைவே வாட்டுகிறது. கடிதத்தை தான் அஜாக்ரதையாக காற்றில் பறக்கவிட்டுவிட்டோமோ...அல்லது தன் தாயார் கையிலகப்பட்டிருக்குமோ! ஒருவேளை சேகர் கையிலகப்பட்டிருக்குமோ!" என்ற பயர்தான் அவளை உலுக்கியது.

ஒரே கடிதத்தைப்பற்றி இருவருக்கும் இரண்டுவிதமான கவலைகள். தன்னெதிரில் சேகர் வாடிய முகத்துடன் நிற்பதைக் கண்டதும் இதயம் படபடவென்று அதி வேகமாக அடித்துக் கொண்டது. இந்தப் பக்கம் திரும்பினுல் இந்திரா நிற்பதைக்கண்டதும், கையில் சூலமும் கோரைப்பல்லுமாக நிற்கும் காளிகா தேவியின் உருவம்போல் சந்திராவுக்குத் தோன்றியதால் அவளையறியாமலேயே முதலில் அலறினுள். மீண்டும் சற்று மௌனம்...

உள் அந்தரங்கம் இன்னதென்பதை யறியாத அமிருதவல்லியம்மாளுக்கு உண்மையில் கிரகத்தின் கோளாறுதான் இது என்று சிறிது ஊர்ஜிதம் உண்டாகியது. இந்த தடபுடலில் நாஸிம்மனும் அங்கு வந்தார். ஏற்கெனவே அவருடைய பயந்த உள்ளத்தில் சந்திராவின் தோற்றம் மிகுந்த பீதியை உண்டுபண்ணியதோடு, "கட்

டாயம் கிரகக்கோளாறுதான்; ஏதோ துர்தேவதை குழந்தையைப் பயமுறுத்தியோ அறைந்தோவிட்டது. இல்லாவிட்டால் திடீரென்று இத்தகைய மாறுதலை அடைவாளா!" என்று நினைத்தார்.

"அம்மா! குழந்தாய்...சந்திரா!...என்னடாப்பா செய்கிறது? ஏன் இப்படி அழுகிறாய்? என்னம்மா உடம்பு?" என்று கரைகடந்த வாத்ஸல்யத்துடன் சந்திராவைத் தடவியவாறு அணைத்துக் கொண்டார். தன்னுடைய செய்கையைக் கண்டு எல்லோரும் விபரீதமாகப் படுவதை உணர்ந்த சந்திரா எத்தனைதான் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டபோதிலும்சகோதரியின் பேரிடிபோன்றதும் கொடிய நாகஸர்ப்பத்தைப் போன்றதுமான கடிதம் அவள் மூளையையே சிதறவடித்ததால் ஒரு வழியிலும் செல்லவிடாது தத்தளிக்கின்றது. சில நிமிஷ நேரங்கழித்து தனக்குள் ஏதோ தீர்மானத்தைச் செய்துகொண்டு கண்களை மலர விழித்து நாற்புறமும் பார்த்தாள். "அப்பாடா...எல்லாம் கனவுதானா...உண்மையல்லவா?" என்றாள்.

அமி:—கண்ணா! என்ன கனவு கண்டாய்?...பயங்கர கனவா! சொல்லும்மா...

எல்லோருமே வியக்கும்படியாக கலகலவென்று ஒரு சிரிப்பு சிரித்தாள். அச்சிரிப்பில் பயங்கரமும், துக்கமும் அளவிடமுடியாத ஒரு புதிய உணர்ச்சியின் வேகமும் ஜ்வலித்தன. "அம்மா!...அம்மா... கனவுஎன்றால் சாமான்யகனவில்லையம்மா! கொஞ்சமும் பயங்கரமே இல்லை. இன்பக் கனவு, ஆனந்தக் கனவு, அற்புதக் கனவு; என் வாழ்நாளைத் தூய்மையாகச் செய்யவந்த துல்லிய கனவு, கண்டேன் கண்டேன்...அம்மா...அபூர்வ வடிவைக்கண்டு ஆனந்தம் கொண்டேன்" என்று தன்போக்காக ஆவேசம்வந்தவளைப்போல் கூறினாள்.

உண்மையில் எல்லோருக்குமே சந்திராவின் தோற்றமும் பேச்சும் நடுக்கலைக் கொடுத்து வியக்கச்செய்தது. "அத்தகைய ஆனந்தக் கனவு எது சொல்லும்மா!" என்று மீண்டும் அமிருத வல்லியம்மாள் அன்பொழுகக்கேட்டாள்.

சந்:—ஏனம்மா பயப்படுகிறாய்? ஒருவிதமான பயமும் வேண்டாம். எனக்கொன்றுமே இல்லை. நீங்கள் தைரியமாக இருங்கள். கண்ணீர் விடவேண்டாம்...என் கனவின் அதிசயத்தை என்னாலேயே தாங்கமுடியாமையால் சற்று பயித்தியம்போல் அழுதேன். சிரித்தேன். மௌனமாகக் கிடந்தேன். வேறொன்றுமில்லை.

அம்மா!...கனவில் நான் கண்ட உருவம் இருக்கிறதே. சாக்ஷாத் மகாலக்ஷ்மியின் அற்புத வடிவமென்றே முதலில் நினைத்து ஆனந்தப் பூரிப்புடன் அந்த சௌந்தரிய பிம்பத்தின் எழிலைப் பருகியவாறு விழிகூடக் கொட்டாமல் பார்த்தபடியே என்னுடைய பாக்கியத்தை எண்ணி நின்றேன்.

அடுத்த வினாடியே அந்த உருவம் என்னைக் கண்டு மந்தகாஸம் செய்து இரு கைகளையும் ஆர்வத்தோடு நீட்டி வாத்ஸல்யம் நிறைந்த பார்வையுடன் "குழந்தாய்! என்னைக் கண்டு யாரோ என்று நினைக்கிறாயா! என்னைத் தெரியவில்லை? கண்மணி! சந்திரா! நான்தான் உன்னுடைய தாயார்! அனுசூயா தேவி....உன்னைப் பார்க்கவும் உன்னிடம் சில விஷயங்களைச் சொல்லவும் நான் ஓடோடி வந்தேன்



வா !...என்னுசை தீர என்னை ஆலிங்கனம் செய்துகொள்ள வா !... கண்மணி ! வா !...உன் தாயிடம் வா..." என்று கூப்பிட்டது.

இதைக் கேட்ட அமிருதவல்லியம்மாள் கண்களில் மளமளவென்று வழிந்தது. தேகம் சிலிர்த்து பழய கதைகள் நினைவில் தாண்டவமாடின. "அனுசூயாவா !" என்று கூறி ஒரு பெருமூச்சுவிட்டாள்.



சங்:—என்னையறியாது என் மனம் அன்பின் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அந்தஉருவத்தின் கைக்குள் அடைக்கலம்புகும்படிச் செய்தது. "அம்பா.......என்னருமை அம்மா!" என்றுவாய்விட்டுக் கதறியவாறு அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டேன். ஆகா! அந்த ஆனந்தத்தை நான் என்ன சொல்வேன் ? அந்த உருவத்தின் ஸ்பரிசத்தில் நான் உலகையே மறந்தேன். "பேரின்பம், பேரின்பம் என்று நீ சொல்வாயே! அந்த பேரின்பம் இதுதானோ ! என்று வியந்தேன். அந்த உருவம் என்னைத் தன் ஆழ்ந்த அன்புடன் கட்டியணைத்துப்பல முத்தங்களிட்டு அன்புப்

புயல் மனத்தில் சற்று தீர்ந்தபின் என்னைத் தன் மடிமீது உட்காரச் செய்துகொண்டு, "அப்பாடா! என்னுள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த ஆவல் புசல் காற்று சற்று அடங்கியது. கண்மணி! தீர்க்க ஸுமங்கலியாய் சர்வமங்களத்துடன் இருக்கவேண்டும்" என்று ஆசீர்வதித்த பின் ஒரு டம்ப்ளர் பாலைக் கொடுத்துக் குடிக்கச் சொன்னாள்.

அது வெறும் பாலில்லை. தேவாமிருதம் என்கிறார்களே அது தான் என்பதில் சந்தேகமே இல்லை. அதைக் குடித்த பிறகு அந்த உருவத்தை மீண்டும் உற்றுப் பார்த்தேன். அம்மா!....நம் வீட்டில் இருக்கும் என் பெற்றோர்களின் படத்திலுள்ள அதே உருவம் என் பதை யறிந்து மீண்டும் நானே கட்டிக்கொண்டு இன்புற்றேன். "ஏனம்மா என்னைவிட்டுச் சென்றாய்?" என்று கேட்டேன்.

அதற்குப் பதிலே பேசாது சிரித்தாள். "பிறகு என்னைக் காட்டிலும் அதிக வாத்ஸல்யத்துடன் உன்னை வளர்க்கும் சிறந்ததாயார் கிடைத்ததனால்தான் உன்னைவிட்டுச் சென்றேன். நீதான் என் நினைவே இல்லாது சந்தோஷமாயிருக்கிறாயே! அதுதான் எனக்கு வேண்டுவது...சந்திரா! நேரமாய்விட்டது. நான் தேவலோகம் போகவேண்டும். உன்னைப்பார்த்தது எனக்குப் பரமானந்தமாகியது. ஆனால் ஒன்று. நீ சிற்சில மாறுதல்களை அடையவேண்டும். உனக்கு வயதாகியும் குழந்தையைப்போலவே நடப்பதும் எல்லா ஆண்களிடம் பேசுவதும், ஆண்பிள்ளைகளுடன் படிப்பதும் கேவலம் நவநாகரீகத்தில் மூழ்கியிருப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை உன்னை அரும்பாடுபட்டு வளர்க்கும் பெரியார்களின் மனத்திற்கு திருப்தி யாகவும், உகப்பாகவும் நடந்துகொள்ளு. உன்மீது அவர்களுக்குச் சிறிது அத்ருப்தி யிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு இடங்கொடுக்காதே. உன்னுடைய நடத்தையில் ஒரு கடுகளவும் அவர்கள் மனத்தாங்கலோ அத்ருப்தியோ அடையக்கூடாது. ஜாக்ரதை. தெரிந்ததா! சந்திரா!...நான் வருகிறேன். என்னுடைய நன்றி விச்வாசத்தையும் நமஸ்காரத்தையும் அமிருதவல்லியம்மாளுக்குச் சொல்லு. அவர்கள் கீறிய கீத்திற்குத் தாண்டாதே! அவர்களுடைய வாக்கிற்கு மறுவாக்கு சொல்லாதே...

என்று கூறும்போது என் தேகம் சிலிர்த்ததம்மா..."ஆண்டவன் மீது ஆணையாகவும், என்னைப் பெற்ற தாயாகிய முன்னறி தெய்வம் உன்மீது ஆணையாகவும் நான் ஒருவித குற்றமும் கனவில்கூட நினைத்ததில்லை. இனியும் நினைக்கமாட்டேன். இது சத்தியம்" என்று நான் புலம்பிக்கொண்டே கூறும் வேகத்தில் என் தாயார் ஒரு கடிதத்தை என் கையில் கொடுத்து மறைந்துவிட்டாள்.

பிறகு நான் விழித்தபோது எனது தூக்கக் கலகத்தில் கடிதத்தின் நினைவால் கேட்டேன்....அம்மா! என்மீது உங்களுக்குக் கோபமா! மனஸ்தாபமா! தெய்வ சாக்ஷியாக நான் யாருக்கும்

தீங்கு செய்யவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று கூறி தாயாரைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

என்னே! விசித்திரமான கனவு! என்னே அற்புத ஜோடனை! சந்திராவின் அந்தரங்க நந்தவனத்தில் பூத்தெழுந்த அருமையான கற்பனைக் கதம்ப மலர்கள் இந்த கனவு என்பதை யார் அறியமுடியும்? தன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்துள்ள சோகத்திற்குப் பரிகாரம் கனவு என்கிற ஔஷதந்தான் என்பதை அவள் சிறியவளாயிருப்பினும் புத்திவிசாலத்தில் நன்குணர்ந்தவள்.

உள் மர்மமறியாத எல்லோரும், (இந்திரா நீங்கலாக) அப்படியே பிரமித்துப்போனார்கள். நரஸிம்மனுக்கும் அமிருதம்மாளுக்கும் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. "இது வெறும் கிரகதோஷத்தின் கனவுதான்'' என்று நரஸிம்மன் தீர்மானித்தார்.

ஆனல் "குற்றமுள்ள நெஞ்சம் குருகுருவென்னும், குரும்பியுள்ள காது தினவு தின்னும்'' என்கிற பழமொழி பொய்யாகிவிடுமா! இந்திராவின் இதயத்தில் அக் கனவின் சம்பவம் ஒரு பெரும் போராட்டத்தை விளைவித்ததுடன் கூறத்திறமற்ற கலவரத்தையும் உண்டாக்கியது.

## 16

உண்மைக் கடிதமும் கற்பனைக் கனவும் ஒன்றுகூடிய நிலையில் சந்திரா புனர்ஜென்மம் எடுத்தவள்போல் மாறிவிட்டாள் என்று சொல்லவும் வேண்டுமா? தான் இனி காலேஜுக்கு வரவில்லை என்பதைத்தானே எழுதிவிட்டாள். சேகர் எத்தனையோதரம் சந்திராவிடம் பழயமாதிரியே பேச வந்தும் சந்திரா பதிலே சொல்லாது வேறு இடத்திற்குப் போய்விடுவதும், ஒரு வார்த்தைமட்டும் பதில் சொல்லுவதுமாக அன்றே மாறிவிட்டாள்.

தன் தகப்பனரிடம் தவிர மற்ற ஆடவர்களிடம் பேசுவதே இல்லை. சமையல்காரனுடன்கூட பேசக்கூடாதென்கிற சங்கல்பம் அவள் மனத்தில் விழுந்துவிட்டதால் தனக்கென்று சகல காரியமும் செய்ய ஒரு தனி கிழவியைப் புதிதாக அமர்த்திக்கொண்டாள். ஒருவரிடமும் பேசாது இத்தகைய புதிய மௌனத்திற்குக் காரணம் கிரகதோஷந்தான் என்று நரஸிம்மன் மனத்தில் அழுத்தமாகப் பட்டுவிட்டதால் வீட்டுக்காரன்மீது சீறி விழுந்து முன்பு தெரிவித்தபடி கடிதத்தை எழுதிவிட்டார்.

இந்திராவுக்கும் சந்திராவிடம் பழயமாதிரி பேச அவளையறியாது ஏதோபோலிருந்ததால் அவளும் பேசவில்லை. சேகருக்குமட்டும்

இது வெறும் கனவுமட்டுமில்லை. ஏதோ விஷபமிருக்கவேண்டு மென்று மனத்தில் பட்டதால் பலதரம் தன் மனைவியைக் கேட்டான். சரியான பதில் எப்படி கிடைக்கமுடியும். ஒன்றும் தெளிவு பெறவில்லை. தெய்வச் செயலாய் மூன்று மாதம்வரையில் சேகருக்கு இதே ஊரில் காம்பு போட்டிருப்பதாகவும், லீவு முடிந்தவுடனே இங்கேயே வேலை செய்யவேண்டுமென்றும் கடிதம் வந்தது கண்டு இந்திராவுக்கு வருத்தமாகவே இருந்தது.

சந்திராவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. தன்னுடைய பரிசுத்தம் தெரியாமல் இப்படித் தாக்கிவிட்டாளே என்கிற புண் சந்திராவின் இதயத்தில் ஆறவேயில்லை. அவளுக்கென்று போகவும் வரவும் இடமாவதுண்டா! அதுவும் கிடையாது. இந்த கவலையே அவளை உருக்கியது. இப்படியே இருந்தால் எங்கே பயித்தியம் பிடித்துவிடுமோ! என்கிற பயம் தகப்பனாருக்குண்டாகியதால் மந்திரம் தந்திரம் முதலியன செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்.

இதையறிந்த சந்திராவுக்கு தனது மனோவியாதியின்காரணமறியாது மந்திரக்காரனிடம் ஆடல்பட நேரப்போகிறதே என்ற பயமே உண்டாகியது. தன்னுருயிர் ஸ்ரீதரனைப்பற்றி எவ்விதமான தகவலும் தெரியாததொரு விசனம். தன் சகோதரியின் கடித பாணம் ஒன்று. இதற்கு மருந்தேது மாற்றேது. இங்கிருந்து சில காலம் தனியாக எங்கேனும் போய்விட்டால் போதும்போல் தோன்றியதால், "அம்மா!...நான் சித்தியம்மா வீட்டிற்குப்போய் எத்தனையோ வருஷங்களாயின. அவர்களிடம் சில மாதம் இருக்கலாமென்று நினைக்கிறேன். என்னை அனுப்புகிறாயா!" என்றாள்.

8302

சந்திராவின் இக் கேள்வி அமிருதவல்லியம்மாளுக்குப் பேராச்சரியமாயிருந்தது. தானே அவளை எங்கேயாவது நல்ல ஆரோக்ய மான இடத்திற்கு அழைத்துச்செல்ல நினைத்திருக்கையில் அவளே தன் சகோதரி வீட்டிற்குப்போகிறதாகக் கூறுவதைக் கேட்டுச் சந்தோஷமே உண்டாகியது. அதோடு அவளை ஸாரநாதனுக்கு மணம் செய்துகொள்ள தன் சகோதரி மிகவும் இஷ்டப்பட்டிருப்பதால் அங்கேயே கூடவிருந்தால் நல்லது. "சந்திராவே மனச் சந்தோஷத்துடன் கல்யாணத்திற்கு இசைவாள்" என்றும் தோன்றியதால் அதற்கு உடனே சம்மதித்துத்தானும் தகப்பனாருமே கொண்டு விட்டு வருவதாகக் கூறினாள்.

சேகர் இங்கு இருக்கும்வரையில், தான் அங்கு இருப்பதற்காகவே சந்திரா புறப்பட்டாள். புறப்படும் தினத்தன்று சந்திராவின் மன வருத்தம் சொல்லமுடியாது துடித்தது. தன் சகோதரியைப் பிரிந்திருந்ததாளே இல்லையாதலால் அவள் நெஞ்சு அப்படியே வெடித்துவிடும்போலாகியது. சொல்லிக்கொள்ளாமல் போகவும் மனமில்லை. அப்படிச் சென்றால் தன் பெற்றோர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்காக இந்திராவின் ரூமுக்குச் சென்றாள்.

# சித்திர ரகளை

## "கார்த்திகை"




காமு:—தனியா என்னபண்றேங்கோ பாட்டி!

பாட்டி:—என்னடியம்மா செய்யறது. குண்டுக்குப் பயந்துண்டு இங்கே என்னேகொண்டு தள்ளிப்புட்டாள். ஒண்டி கட்டைக்கி என்ன வேணும்னு ஒரு சுறங்காய் அரிசி சாதத்தை கொதிக்கவெக்கறேன். ராத்திரி பலகாரத்துக்கு கொஞ்சம் தோசை பண்ணேன். ஒண்டியா இருந்ததே இல்லே. ஒடம்பு எங்கி ஓடாப்போச்சு.


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, B. O.

# மோகினி அன்பர்களுக்கு ஓர் அரிய விருந்து

ரூ. 2-8

வைதேகி
பத்மசுந்தரன்
ராதாமணி
சாருலோசனா
காதலின் கனி

ரூ. 2

நவநீதகிருஷ்ணன்
☐ ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி
ஞானதீபம்

ரூ. 1-8

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1-4

☐ பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
☐ வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீ திலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
☐ புகழ்மாலை
கலாநிலயம்




## அடுத்த இதழில்

### இதே இடத்தை

கவனியுங்கள்

**நினைவிருக்கட்டும்**

ரூ. 1

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

அணா 14

☐ கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12

கதம்பமாலை *

அணா 10

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணா 6

பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

அணா 4

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

ஷை 30 நாவல்களில் ☐ குறிப்பிட்டுள்ளவை தவிர மீதி எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் வாங்கினால் ரூ30க்கு தரப்படும். ரயில்வே பார்ஸல்மூலம் எங்களது செலவில் அனுப்பப்படும்.

☐ குறிப்பிட்ட புத்தகங்கள் தற்சமயம் கைவசமில்லை. மற்ற புத்தகங்களை ஒரே செட்டாக வாங்கினால் ரூ. 35/-க்கு தரப்படும். ரயில்செலவு இனாம்.

ஷை குறைந்த விலை திட்டம் 30-9-1942 வரைதான் என்பதை கவனியுங்கள்.

ஷை 29 நாவல்களில் ☐ குறிப்பிட்டுள்ளவை தவிர மீதி எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் வாங்கினால் ரூ10க்கு தரப்படும். ரயில்வே பார்ஸல்மூலம் எங்களது செலவில் அனுப்பப்படும்.